# ஜலதோஷ நஷ்டம்



1969-ம் ஆண்டு பிப்ரவரி 27-ம் நாள் கென்னடி முனையில் 'அப்போலோ-9' விண்கலம் புறப்படத் தயாரானது. ஏற்பாடுகளெல்லாம் ஏக தடபுடலாக நடந்தன. அத்தனையையும் நிறுத்தி வைக்கும்படி திடீரென உத்தரவு பிறப்பிக்கப்படுகிறது. காரணம்... விண்கலத்தில் பயணம் செய்ய இருந்த 3 விண்வெளி வீரர்களுக்கும் ஜலதோஷம்.

இதனால் அமெரிக்க விண்வெளி ஆராய்ச்சி நிறுவனத்திற்கு ஏற்பட்ட நஷ்டம் அப்போதைய மதிப்பில் ரூ.50 லட்சம். மனித வரலாற்றில், அதிக செலவு ஏற்படுத்திய ஜலதோஷம் இதுதான்!

– எஸ். சுவாமிநாதன், மன்னார்குடி.

# கடல் எல்லை

ஒரு நாட்டின் கடல் எல்லை என்பது அந்த நாட்டின் கடலில் இருந்து மூன்று கடல் மைல்கள் ஆகும். அதாவது 6,080 அடி தொலைவு.

– ஆரணி தமிழ்செல்வம்.



# பகடைக் காய்கள்





ராஜேஷ்குமார்

1

டி.வி.யில் 'வந்தே மாதரம்' வந்துகொண்டிருந்தபோது கனமான கம்பளிப் போர்வையை விலக்கி, கண்களைத்

திறந்தான்... துவாரகேஷ். டெல்லியின் காலை நேரப் பனி, கண்ணாடி ஜன்னலுக்கு வெளியே கெட்டித் தயிர் நிறத்தில் தெரிந்தது.

சமையலறையில் இருந்து காப்பி மணம் வந்தது.

"ஷாமினி..."

தன் அழகான பொண்டாட்டியின் பெயரைக் கூப்பிட்டுக் கொண்டே எழுந்து உட்கார்ந்தான். அவனுடைய அசாத்திய உயரமும்– புஜங்களின் பலமும் இப்போது தெரிந்தன.

"வந்துட்டேன்..."

– உள்ளே இருந்து குரல் கொடுத்தாள்.

"காப்பி ரெடியா...?"

"ஆச்சு...! போய் வாயைக் கொப்பளிச்சுட்டு வாங்க."

"என்னது...? இந்தக் குளிர்ல வாயைக் கொப்பளிக்கிறதா...? சூடா காப்பி உள்ளே போனாத்தான் வாயைத் திறக்க முடியும்..."

"பாத்ரூமுக்குப் போங்க... ஹீட்டர்ல தண்ணி வரும்... ரெகுலேட்டரை அட்ஜஸ்ட் பண்ணி– உங்களுக்கு வேண்டிய சூட்டுல தண்ணியைப் பிடிச்சு வாயைக் கொப்பளிச்சிட்டு வாங்க... அப்பத்தான் காப்பி..."

"ஷாமினி! பிளீஸ்... மொதல்ல காப்பி...!"

"இல்ல..."

"ராட்சசி...!"

"இருந்துட்டுப் போறேன்."

"பேசாமே... என்னோட அத்தைப் பொண்ணு பாக்யலட்சுமியைக் கல்யாணம் பண்ணி இருந்திருக்கலாம்..."

"பண்ணி இருக்கலாமே...? பின்னே எதுக்காக என்னைத் தொரத்தித் தொரத்திக் காதலிச்சீங்களாம்...?"

"நான் எங்கே உன்னைத் தொரத்தினேன்...? நான் 'பைலட்'டா இருந்த விமானத்துக்கே உன்னை அடிக்கடி பணிப் பெண்ணாக போட்டாங்க. கண்ணுக்கு லட்சணமா இருக்காளேன்னு பார்த்தேன். நீயும் பையன் நல்லா இருக்கானேன்னு பார்த்தே. ரெண்டு மாசத்துக்கு அப்புறம் ஒரு நாள் காலையில– உன்னை 'ஏர் போர்ட்'ல பார்த்து 'ஐ லவ் யூ'ன்னு சொல்லி ஒரு ரோஜாப்பூ குடுத்தேன். நீயும் 'ஐ லவ் யூ'ன்னு சொல்லி யாரும் பார்க்காத நேரத்துல... பூ குடுத்தே, என் உள்ளங்கைக்கு முத்தம் குடுத்தே... அப்புறம்..."

"சரி... கதாகாலாட்சேபம் போதும்..."

ஷாமினி, காப்பி தம்ளரோடு சமையலறையில் இருந்து வெளிப்பட்டாள்.

" நீங்க இப்போ வாயைக் கொப்பளிக்காமே காப்பி குடிக்கணும்... அவ்வளவுதானே?"

"ஆமா..."

"இந்தாங்க... குடியுங்க..."

"ஆஹ்ஹா! இப்பத்தான் நீ என்னோட பொண்டாட்டி..."

காப்பி தம்ளரை ஆர்வமாய் வாங்கி, உதட்டுக்குக் கொடுத்தான்.

"என்னங்க...?"

"ம்..."

ஷாமினி தன் 'நெயில் பாலிஷ்' பூசிய – பொன்னிற விரல்களால் துவாரகேஷின் அடர்த்தியான கேசத்தைக் கோதிக்கொண்டே கேட்டாள்.

"உங்களுக்கு நிஜமாவே ... அந்த பாக்யலட்சுமியைக்

கட்டிக்க மனகல ஆசை இருக்காங்க...?"

"ச்சை! அவ எல்லாம் ஒரு பொண்ணா...? அழுக்குச் சேலையோட வரட்டி தட்டத்தான் லாயக்கு..."

"நெஜமா...?"

"நெஜமாத்தான்..."

"சரி... போய் குளிங்க! 'ஏர்மென் கிளப்'புல... எட்டு மணிக்கு ஏதோ 'மீட்டிங்'குன்னு சொன்னீங்களே...?"

"ஆமா..."

"இப்ப மணி ஏழு..."

"இதோ கிளம்பிட்டேன்..."

காலியான காப்பி தம்ளரை ஷாமினியிடம் கொடுத்துக்கொண்டே, கட்டிலில் இருந்து கீழே இறங்கினான். குளிலறைக்குள் நுழைந்து – அரை மணி நேரத்தில் குளித்து முடித்து– சோப்பின் மணம் கமழ வெளியே வந்தான்.

முரட்டுத் துணியாலான பேண்ட்டுக்குள்ளும், மெலிதான சட்டைக்குள்ளும் நுழைந்து, தலை சீவி, பவுடர் பூசி, டைனிங் டேபிளுக்கு வந்தபோது சுடச்சுட இட்லியும், சாம்பாரும் காத்திருந்தன.

ஷாமினியோடு பேசிக்கொண்டே – இரண்டு இட்லியை விழுங்கி இருப்பான்.

வாசலில் 'காலிங்பெல்' கூப்பிட்டது.

"யார்னு தெரியலையே...?"

"எதிர்த்த குவார்ட்டர்ஸ் ஷைலா, ஓசி போன் பேச வந்திருப்பா. இந்நேரமானா போதும்... அவ தொந்தரவுதான்..."

"தெனமும் அப்படி யார் கூடத்தான் பேசறா...?"

"தெரியலையே...?"

"எவனாவது 'பாய்பிரண்டா' இருக்கப்போறான்... கொஞ்சம் 'வாட்ச்' பண்ணு."

துவாரகேஷ் சொல்லிக்கொண்டு இருக்கும்போதே– ஷாமினி, வாசல் கதவை நோக்கிப் போனாள்.

கதவின் தாழ்ப்பாளை விலக்கியவள் மலர்ந்தாள்.

"குட்மார்னிங் கேப்டன்..."

'பைலட்' சென் உதடு பிரியாமல் சிரித்தார்.

காதோர நரையும்– அணிந்திருந்த – வெள்ளை நிற சபாரியும் அவருக்கு அமர்க்களமாய் இருந்தன.

"குட்மார்னிங் ஷாமினி...! துவாரகேஷ் என்ன பண்றார்?"

"இட்லிகளை சாம்பரோடு சேர்த்து 'ஹதம்' பண்ணிட்டிருக்கார்."

அவள் சொல்லிக்கொண்டு இருக்கும்போதே...

கைகளை டவலால் துடைத்தபடி... உள்ளே இருந்து துவாரகேஷ் வந்தான்.

"குட்மார்னிங் கேப்டன்..."

"குட்மார்னிங்..."

"வாங்க, டிபன் சாப்பிடலாம்..."

"நோ... நான் சாப்பாட்டை முடிச்சிட்டுதான் வந்திருக்கேன். சப்பாத்தி, கட்லெட், பிரட் சாண்ட்விச். ஆம் லெட்... வயித்துக்குள்ளே ஒரு மில்லி மீட்டர் இடம்கூட காலியில்லை..."

"காப்பியாவது...?"

"வேண்டாம்...! துவாரகேஷ்... உங்க 'பிரேக் பாஸ்ட்' முடிஞ்சுதா...?"

"முடிஞ்சுது..."

"ஒரு அரை மணி நேரம் என்னோடு வெளியே வர

முடியுமா...?"

"கேப்டன்! இன்னிக்கு 'ஏர்மென் கிளப்'புல 'மீட்டிங்'..."

"தெரியும்...! 'கிளப்'புக்கு என் கார்லேயே போயிடலாம், வாங்க..."

துவாரகேஷ் 'ஷூ'க்களை மாட்டிக்கொண்டான்.

"ஷாமினி! வரட்டுமா...?"

அவள் தலையாட்ட - சென் அவளைப் பார்த்து புன்னகைத்தார்.

"ஏர்ஹோஸ்டஸ்ஸா இருந்தப்ப உன்கிட்ட இருந்த அழகுல பத்து பர்சென்டை இப்ப உன்கிட்ட காணோம் ஷாமினி..."

"அந்தப் பத்து பர்சென்ட்டை, உங்க- பைலட்தான் திருடிகிட்டார் கேப்டன்..."

"குறும்புக்காரி..."

சிரித்துக்கொண்டே சென், துவாரகேஷோடு வெளியே வந்தார்.

கார், வீட்டைவிட்டுக் கொஞ்சம் தள்ளி- ஒரு மரத்துக்குக் கிழே நிறுத்தப்பட்டிருந்தது.

காரை நோக்கி நடக்கும்போதே துவாரகேஷ் கேட்டான்.

"என்ன கேப்டன்... இவ்வளவு காலையில...?"

"அவங்க வந்திருக்காங்க...!"

"யார்...?"

"உஸ்மான், பாபுராவ்..."

"எங்கே...?"

"கார்ல..."

அந்த காரின் நான்கு பக்கக் குளிர் கண்ணாடிகளும்



ஏற்றப்பட்டிருக்க- சென், காரை நெருங்கி - முன்பக்கக் கதவைத் திறந்து கொண்டு உள்ளே போனார்.

அவரைத் தொடர்ந்து துவாரகேஷ் உள்ளே போனான்.

பின்இருக்கையில் உட்கார்ந்திருந்த அந்த இரண்டு பேரும் - சின்னச் சின்னப் புன்னகையோடு "ஹலோ" என்றார்கள்.

துவாரகேஷும் சிரித்து "ஹலோ" என்றான்.

மூக்குக் கண்ணாடி அணிந்து கொஞ்சம் பெரிய மனுஷத் தன்மையாய் தெரிந்த உஸ்மான்... "கோ-பைலட்! சுகமா?" என்றான்.

"பைன்..."

"வர்ற ஞாயிற்றுக்கிழமைதான் உங்க ரெண்டு பேரையும் வந்து பார்க்க இருந்தோம். அதுக்குள்ளே எங்களுடைய மேலிடத்தில் இருந்து ஒரு தகவல் வந்தது. அதான் பார்க்க வந்தோம்..."

"என்ன தகவல்...?"

காரைக் கிளப்பினார் சென்.

'டிரிம்' செய்த தாடியோடு- பழைய இந்தி வில்லன் பிரானை ஞாபகப்படுத்தும் பாபுராவ் கேட்டான்.

"நம்ம திட்டத்துக்கு உதவப் போகிற 'ஏர்ஹோஸ்டஸ்' பேர் என்ன சொன்னீங்க...?"

"வஹிதா..."

"அவ இந்துவா... முஸ்லீமா...?"

"சந்தேகமென்ன... முஸ்லீம்தான்.!"

"நோ... யூ ஆர் ராங்க்... அவ பிறப்பாலே இந்து..."

"இந்துவா...?"

- சென்னும், துவாரகேஷும் அதிர்ச்சியாய் ஒருத்தரையொருத்தர் பார்த்துக்கொண்டார்கள்.

"எஸ்..."

"உங்களுக்கு எப்படி இந்தத் தகவல்...?"

"சரி... அவ இந்துவா இருந்தா என்ன...? முஸ்லீமா இருந்தா என்ன...? நம்ம திட்டத்துக்குத்தான் அவ உதவி பண்ணுறதா ஒத்துக்கிட்டாளே...?"

"திட்டத்துக்கு வஹிதா முழுமையான ஒத்துழைப்பு கொடுப்பாளா? திடீர்னு தேசபக்தி வந்துடாதே...?"

துவாரகேஷ் சிரித்தான்.

"வஹிதாவுக்குத் தேசம் பெரிசில்லை; காசுதான் பெரிசு. உங்கள் மேலிடம் அவளுடைய பூர்வாசிரமத்தை பத்தி கிளறி இருக்கு... அவ ஏர்ஹோஸ்டஸ்ஸா வர்றதுக்கு முந்தி எங்கே வேலை பார்த்திட்டிருந்தா தெரியுமா...?

"எங்கே...?"

"ஓட்டல் கோல்ட் ஸாண்ட்ல... ரிசப்ஷனிஷ்டா இருந்தா..."

"நல்ல உத்தியோகம்தானே...?"

"ரிசப்ஷனிஷ்ட்ங்கிறது... 'பார்ட் டைம்' உத்தியோகம் மாதிரி. அவ முழுநேர வேலை ... பெரிய வி.ஐ.பி.களுக்கு 'கம்பெனி' தர்றதுதான்..."

"அதாவது... பலான பெண்?"

"பச்சையா சொன்னா அப்படித்தான்..."

"ஒழுக்கம் இல்லாத பொண்ணுக்கு 'ஏர்ஹோஸ்டஸ்' உத்யோகம் எப்படிக் கிடைச்சது...?"

"விமானப் போக்குவரத்து துறை அமைச்சரோட பி.ஏ.வுக்கு வஹிதா அடிக்கடி கம்பெனி குடுத்ததோட பலன்... கைமேல அப்பாயிண்ட்மெண்ட் ஆர்டர்."

"அப்படின்னா வஹிதாவை நம்பி இந்தத் திட்டத்தைச் செயல்படுத்தலாமா...?"



"தாராளமா..."

"உங்க திட்டத்துல எந்த மாற்றமும் இல்லையே...?"

"இல்லை..."

சென் தலையாட்ட - துவாரகேஷ், உஸ்மானை ஏறிட்டான்.

"பேசின தொகை எப்போ கிடைக்கும்?"

"இன்னும் ரெண்டு நாள்ல..."

"முழுத்தொகை இருபத்தஞ்சு லட்சமும் கைக்கு வரணும்..."

"வரும்."

"அதுதவிர வஹிதாவுக்கு அஞ்சு லட்சம் தனியா..."

"குடுத்துடறோம்...! திட்டம் தோட்டா பாய்ஞ்ச மாதிரி துல்லியமா இருக்கணும்."

"இருக்கும்..."

"சரி... ரெண்டு நாள் கழிச்சு பணத்தோடு சந்திக்கிறோம். காரை அப்படி ரோட்டோரமா நிறுத்திக்குங்க... சென்."

சென், காரை அந்த பாபர்கான் ரோட்டின் ஆள் அரவம் இல்லாத இடத்தில் ஒதுக்கி நிறுத்தினார்.

உஸ்மானும், பாபுராவும் இறங்கிக்கொண்டார்கள்.

"ஸீ...யூ..."

கார் கிளம்பி சிறிது தூரம் போனதும்—

துவாரகேஷ், கண்களை மூடித் திறந்து சந்தோஷித்தான்.

"இன்னும் ரெண்டு நாள்ல ஆளுக்குப் பன்னிரண்டரை லட்சம் கேப்டன்! அந்தப் பணத்தை என்ன பண்ணப் போறீங்க...?"

"அந்த யோசனை அப்புறம்...! மொதல்ல திட்டம்

போட்டது போட்ட மாதிரி நடக்கணும்..."

"என்ன கேப்டன், திடீர்னு சந்தேகம்...?"

"பறக்கிற விமானத்தில்... ஒரே நேரத்துல... ஏழு எம்.பி.க்களையும்... எட்டு பயணிகளையும் சுட்டுக் கொல்றது... அவ்வளவு சுலபமா... என்ன...?"

## 2

டெல்லி பாராளுமன்ற கட்டடம்.

இந்தியாவின் மொத்த எம்.பி.க்களும் சண்டைக் கோழிகளாய் மாறி– சட்டைகளையும், வேட்டிகளையும் கிழித்துக்கொள்கிற பெருமை மிக்க இடம்.

கட்டடத்தின் உள்ளே...

ஒரு ஏ.ஸி. காபினெட்டுக்குள்– பத்துப் பேர் அடங்கிய சிறிய கும்பல் ஒன்று விவாதத்தில் இருந்தது.

சொற்பமாய் ஆங்கிலமும், மிகுதியாய் இந்தியும் சம்பாஷனைகளில் வெடித்தன. குல்லாய் தரித்து மினுமினுப்பாய் இருந்த ஒரு குண்டோதர எம்.பி., கையை உயர்த்தி பேசிக்கொண்டிருந்தார்.

"போர் கூடாது! சமாதானமே நல்லது என்கிற கொள்கையை வலியுறுத்தி... அண்டை நாடுகளுக்குத் தூது செல்ல இருக்கும் குழுவில் நானும் இடம் பெற்றதற்காக– நன்றியைத் தெரிவித்துக்கொள்ளும் அதே நேரத்தில், நான் இன்னொரு கருத்தையும் இங்கே சொல்ல ஆசைப்படுகிறேன். நமது பாரதம் என்றைக்குமே



வம்புச் சண்டைக்குப் போனதில்லை. அண்டைய நாடுகளின் உள்விவகாரங்களில் தலையிட்டதில்லை.

ஆனால், அண்டை நாடுகள் அப்படியில்லை. வேண்டுமென்றே நம்மைச் சீண்டிப் பார்க்கின்றன. தூங்குகிற சிறுத்தையைக் குச்சியால் குத்திப் பார்க்கிறார்கள். நாம் பொறுமை காட்டினால் – அதைக் கோழைத்தனமாக நினைக்கிறார்கள். நம் ராணுவம் எப்படிப்பட்டது என்பதை ஒரு முறையாவது அவர்களுக்குக் காட்ட வேண்டும். நமது ராணுவம் நெருப்பு என்பதை அவர்களுக்குப் புரிய வைக்க வேண்டும்..."

அவர் பேசிவிட்டு உட்கார்ந்ததும்– முன்வரிசையில் உட்கார்ந்திருந்த சமாதானக் குழுத் தலைவர் முன்ஷிராம் எழுந்தார்.

"இந்த சமாதானக்குழுவில் என்னையும் சேர்த்து மொத்தம் ஏழு பேர். முக்கியமான எதிர்க்கட்சிகளில் இருந்து– பொறுப்பான ஏழு எம்.பி.க்களை பிரதமர் தேர்ந்தெடுத்துள்ளார்கள். நமது பணி சமாதானத்தை வலியுறுத்துவது. எனக்கு முன்னால் பேசிய நாடாளுமன்ற உறுப்பினர் மனோகர்லால், இந்தியா அண்டை நாடுகளுக்குப் பாடத்தைப் புகட்ட வேண்டுமென்று சொன்னார்.

நம் சமாதானக் குழுவின் முயற்சி எடுபடாமல் போனால்– இந்தியா அந்தப் பாடத்தை எதிரிகளுக்குப் புரிய வைக்கும். இப்போது நம் சமாதானக் குழு எந்தெந்த நாடுகளுக்குச் செல்ல உள்ளது? ஒவ்வொரு நாட்டிலும் எத்தனை நாட்கள் தங்கி யார் யாரோடு பேசப் போகிறோம்? என்பதைப் பற்றித் தெரிந்துகொள்ளத்தான் இங்கே கூடி இருக்கிறோம். வெளிநாட்டு விவகார அமைச்சரின் செயலாளர் பனார்சிதாஸ் அவர்கள் இப்போது அதைப் பற்றி நம்மிடையே பேசுவார்..."

எல்லோரும் 'சொத்... சொத்' என்று கைகளைத் தட்ட, வெளிநாட்டு விவகார அமைச்சரின் செயலாளர் பனார்சிதாஸ் எழுந்தார். தன் விஸ்தாரமான வழுக்கையை - இடதுகை சுண்டு விரலால் கீறிக்கொண்டே பேச ஆரம்பித்தார்.

"இந்த சமாதானக் குழுவில் இடம்பெற்றுள்ள தலைவர் முன்ஷிராம் அவர்களே! உறுப்பினர்கள் ரமேஷ்வர்மா, தேவேந்திர கவுடா, கேவல் சி. ராம் நாயக், கிருஷ்ண ஜெயந்த், ஜனார்த்தன்... ஆகியோர்களே! உங்கள் யாவர்க்கும் என் வாழ்த்துகள் கலந்து வணக்கம். வருகிற ஞாயிற்றுக்கிழமை ஐந்தாம் தேதி விடியற்காலை ஐந்தரை மணிக்கு பாலம் விமான நிலையத்தில் இருந்து வாயுதூத் விமானம் மூலம் காஷ்மீர் புறப்பட்டு போய் - பின் அங்கிருந்து அண்டை நாடுகளுக்குப் பயணிக்க உள்ளீர்கள். இப்படியொரு சமாதானக்குழு புறப்பட்டுப் போவது நம் நாட்டில் உள்ள சில சமூக விரோதி இயக்கங்களுக்குப் பிடிக்கவில்லை என்பது தெரிகிறது.

"இந்தியாவுக்கும், அண்டை நாடுகளுக்கும் போர் ஏற்பட்டு- அதன் விளைவாக நாட்டின் பொருளாதாரமும், கட்டுக்கோப்பும் குலைய வேண்டும் என்று எதிர்பார்க்கிறார்கள். அவர்களின் முயற்சிக்கு ஒரு சில எதிர்க்கட்சித் தலைவர்களும்- அந்தத் தலைவர்களுக்கு வேண்டிய தொழிலதிபர்களும் ஆதரவு தெரிவித்து இருக்கிறார்கள்.

"அவர்களின் பலமான எதிர்ப்புகளுக்கு மத்தியில் நீங்கள் இந்தப் பயணத்தை மேற்கொள்ள இருக்கிறீர்கள். இந்த சமாதானக்குழு அண்டை நாடுகளோடு பேச்சுவார்த்தை நடத்தி- போரை நிறுத்திவிட்டால்- தற்போதைய அரசுக்கு நல்ல பெயர் கிடைத்து - அதன் மூலம் மக்கள் மத்தியில்



ஆளும் கட்சி செல்வாக்கைப் பெற்றுவிடலாம் என்கிற எண்ணத்தினால்- சமாதானக் குழுவை அனுப்புவது கோழைத்தனம் என்கிற மாதிரி பிரசாரம் செய்து வருகிறார்கள். அந்தப் பிரசாரத்தை முறியடிக்கும் வகையில் உங்கள் பயணம் அமைய வேண்டும் என்று வாழ்த்துகிறேன்."

உறுப்பினர் ரமேஷ் வர்மா எழுந்து குறுக்கிட்டார்.

"சமாதானக் குழுவில் நான் இடம் பெறக்கூடாது என்று நேற்று இரவு எனக்கு மிரட்டல் போன் வந்தது."

"போலீசில் புகார் கொடுத்திருக்கிறீர்களா?"

"கொடுத்துள்ளேன்..."

"இந்தப் பயண முயற்சி வெற்றிபெறும் வரையில் உறுப்பினர்கள் ஜாக்கிரதையாய் இருக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். மிரட்டலை லட்சியம் செய்து- தூதுக் குழுவில் இடம்பெற விரும்பாத உறுப்பினர்கள் இப்போதே தங்கள் மறுப்பைச் சொல்லிவிட்டு, பொறுப்புகளில் இருந்து - விலகிக்கொள்ளலாம். அப்படி யாராவது விலகிக்கொள்ள நினைக்கிறீர்களா?"

யாரும் வாயைத் திறக்கவில்லை.

வஹிதா, விமான நிலையத்தின் உள்ளே- இருந்த 'ஏர் ஹோஸ்டஸ்'களுக்கான ஓய்வு அறையில் இருந்து - உயர்த்திப் போட்ட கொண்டையோடு வெளிப்பட்டாள். துவாரகேஷ் எதிர்ப்பட்டான்.

"ஹல்லோ... வஹிதா..."

"ஹலோ..."

"என்ன, பறக்கப் போறியா...?"

"ஆமா...".

"திரீ நாட் டூவா...?"

"அதே..."

"இன்னும் நேரமிருக்கே...? கான்டீன் வரைக்கும் போய் ஒரு காப்பி குடிப்போமா...?"

வஹிதா சிரித்தாள்.

"என்கிட்ட என்னவோ பேசப் போறீங்க.., சரியா...?"

"ம்..."

"வாங்க, பேசிகிட்டே போகலாம்..."

நடந்தார்கள். கொஞ்சம் தொலைவில் 'ஏர்போர்ட் லவுஞ்ச்' சற்று ஆரவாரமாக இருந்தது. ஒரு மந்திரி வெளிநாடுக்கு பறக்க– கழுத்தில் ரோஜா மாலையோடு சிரித்துக்கொண்டிருந்தார். நிமிஷத்துக்கொரு தடவை 'ஜிந்தாபாத்' என்கிற கோஷம் எழுந்து– அடங்கியது.

"என்ன பேசணும்...?"

"காலையில அந்த உஸ்மானும், பாபுராவும் வந்திருந்தாங்க...?"

"அடே! ஞாயிற்றுக்கிழமைதானே வர்றதா சொன்னாங்க..."

"அவங்க இன்னிக்கு திடீர்னு வந்ததுக்குக் காரணம் இருக்கு."

"என்ன...?"

"நீ பிறப்பால் இந்துவாமே...?"

சட்டென்று நின்றாள் வஹிதா.

"யார் சொன்னாங்க...?"

"அவங்கதான்..."

"எப்படித் தெரியுமாம்...?"

"மேலிடத்தில் சொன்னாங்களாம்."

"என்னோட பூர்வாசிரமத்தை சரியாத்தான் தோண்டி இருக்காங்க! சரி... நான் இந்துவா இருந்தா அவங்களுக்கென்னவாம்...?"

"நாம வர்ற அஞ்சாம் தேதி செயல்படுத்தப் போகிற திட்டத்துக்கு உன்னோட ஒத்துழைப்பு முழுமையாக கிடைக்குமா... கிடைக்காதோங்கிற சந்தேகம் வந்துடுச்சு..."

"இந்துவா இருந்தா என்ன... முஸ்லீமா இருந்தா என்ன...? அவங்களுக்கு நடக்க வேண்டியது வேலை. எனக்கு கிடைக்க வேண்டியது பணம். தட்ஸ்... ஆல்..."

"நானும் அவங்கிட்டே இதையேதான் சொன்னேன். சமாதானம் ஆயிட்டாங்க..."

"பணம் எப்ப கைக்கு வரும்...?"

"இன்னும் ரெண்டு நாள்ல..."

"என்னோட பங்கு... அஞ்சு லட்சம்ங்கிறதை அவங்ககிட்டே சொல்லிட்டீங்களா...?"

"சொல்லியாச்சு...! ஆமா, நீ ஒரு இந்துங்கிற விஷயத்தை இதுவரைக்கும் என்கிட்டேயும் சொல்லலையே..."

'லிப்ஸ்டிக்' பூசிய உதட்டை லேசாய் பிதுக்கினாள் வஹிதா.

"எதுக்காகச் சொல்லணும்...? அதை உங்ககிட்டேயோ... மத்தவுங்ககிட்டயோ சொல்றதுனால ஒரு பைசா அளவுக்காவது பிரயோஜனம் உண்டா?"

"..................."

"நான் சொல்லலைன்னு வருத்தப்படுறீங்களா?"

"ஆமா..."

"இப்ப சொல்றேன்... கேட்டுக்குங்க...! என் வாழ்க்கையே ஒரு குளறுபடி. இந்த நாட்டுக்குப் பிரதமரோ... ஜனாதிபதியோ ஒரு ரெண்டு நிமிஷ நேரம்

என்னோட கதையைக் கேட்டாங்கன்னா... எனக்கு தேசியப் பெண்ணுங்கிற பட்டத்தைக் கொடுக்க உத்தரவு போட்டுருப்பாங்க. என்னோட அப்பா ஒரு ஆந்திர ஆசாமி. அம்மா மைசூர்க்காரி. ரெண்டு பேரும் தமிழ்நாட்டுக்கு ஓடிப் போய், அங்கதான் நான் ஜனிச்சேனாம்.

வயித்தில் இருந்து வெளியே வந்த நேரம்... அம்மாவும் 'அவுட்'. பத்து வயசு வரைக்கும் கேரளாவில் ஒரு கிறிஸ்தவ சேவை அமைப்பில் இருந்தேன். அதுக்கப்புறம் ஒரு முஸ்லீம் பெரியவர் என்னைத் தத்தெடுத்துப் படிக்க வெச்சார். அப்பத்தான் எனக்கு வஹிதாங்கிற நாமகரணம் சூட்டப்பட்டது.

நான் படிப்பை முடிச்சதுமே... முஸ்லீம் பெரியவர் மண்டையைப் போட, அவரோட சொந்தக்காரங்க என்னை விரட்டி அடிக்க– பம்பாய்க்கு ஓடி வந்தேன். ஓட்டல் 'ரிசப்ஷனிஸ்டா' சேர்ந்தேன். அதுக்கப்புறம்..."

துவாரகேஷ் கையமர்த்தினான்.

"தெரியும்..."

ஏர்மென் கான்டீனுக்குள் நுழைந்தார்கள்.

கான்டீன் வெறிச்சோடிப் போயிருக்க– அட்டை தம்ளர்களில் காப்பியை வாங்கிக்கொண்டு மூலையில் போட்டிருந்த மேசைக்கு போய் எதிரெதிரே உட்கார்ந்தார்கள்.

ஒரு வாய் காப்பியை உள்ளே தள்ளிய வஹிதா கேட்டாள். "திட்டம்... எப்படி? சரியா 'ஓர்க் அவுட்' ஆகுமா?"

"ஆகும்..."

"நாம மாட்டிக்க மாட்டோமே?"

"இல்ல..."

"மொத்தம் எத்தனை எம்.பி.ங்க...?"



"ஏழு பேர்..."

"பயணிகள்...?"

"எட்டு பேர்..."

"ஆக... பதினைந்து..."

"ம்... மூணு 'ரிவால்வர்'களை உபயோகிக்க வேண்டியிருக்கும்..."

"பயணிகள்ல... வி.ஐ.பி. யாராவது இருக்காங்களா?"

"இல்லை..."

"பெண்கள்...?"

"மூணு பேர்..."

"பை...த... பை... உங்க மனைவி ஷாமினி எப்படி இருக்கா?"

"சந்தோஷமா..."

"புளிப்பா ஏதாவது சாப்பிடுறாளா?"

"ஊ... ஹூ...ம்..."

"நீங்க 'பிளைட்'டை ஓட்டத்தான் லாயக்கு... கல்யாணமாகி ஆறு மாசமாச்சு. இப்படித்தான் பத்தியமா வெச்சுக்கிறதா?"

"ஷாமினி ரெண்டு வருஷம் கழிச்சுத்தான் குழந்தையைப் 'பெத்துக்குவாளாம்..."

"அவ கிடக்கிறா... ஏமாந்த சமயமா பார்த்து 'பவுல்' ஆட்டம் ஆடிடுங்க..."

காப்பி புரையேற– துவாரகேஷ் சிரித்தான்.

"ஷாமினிக்கு இது தெரிஞ்சா தரையில என்னை இறங்கவே விடமாட்டா...! ஆமா, நீ எப்ப கல்யாணம் பண்ணிக்கப் போறே...?"

"கைவசம் மாப்பிள்ளை தயார்..."

“அட…!”

“நம்ம திட்டம் ‘கிளிக்’ ஆனதும்… கையில பணம், வஹிதாவுக்கு கல்யாணம்…”

“பரவாயில்லையே…? விஷயத்துல தெளிவா இருக்கே… மாப்பிள்ளை யாரு…?”

“சஸ்பென்ஸ்…! பத்திரிகையில் பார்த்துத் தெரிஞ்சுக்கலாம். நான் திரீ நாட் டூவுக்குப் போகணும், கிளம்பலாமா…?”

வஹிதா எழுந்தாள்.

## 3

**நா**ன்காம் தேதி சனிக்கிழமை சாயந்தரம்– ஏழு மணி. ஒரு ஐந்து நட்சத்திர ஓட்டல் அறைக்குள் வட்டமான டீபாயைச் சுற்றிலும் உஸ்மான், பாபுராவ், ‘பைலட்’ சென், துவாரகேஷ், வஹிதா ஐந்து பேரும் உட்கார்ந்திருந்தார்கள். ஒரு ‘ஸ்காட்ச் பாட்டில்’ உடைப்பட்டிருக்க– தம்ளர்களில் பொன்னிற பானம் அசைந்தது.

உஸ்மான் கேட்டான்.

“கேப்டன்! திட்டத்தில் எங்கேயாவது நெருடல் இருக்கிறதா ‘பீல்’ பண்ணுறீங்களா…?”

“இல்லை…”

“திட்டத்தை ஒரு தடவை சொல்லுங்க பார்க்கலாம்.”

பைலட் சென், ஸ்காட்ச் தம்ளரை எடுத்து இரண்டு வாய் சப்பிவிட்டு– எல்லோரையும் ஒரு பார்வை பார்த்தபடி பேச ஆரம்பித்தார்.




“நாளை விடியற்காலை ஐந்தரை மணிக்கு டெல்லியில் இருந்து காஷ்மீருக்குப் புறப்பட்டுப் போகும்– வாயுதூத் விமானத்திற்கு நான் ‘பைலட்’. துவாரகேஷ் ‘கோ பைலட்’. வஹிதா ‘ஏர் ஹோஸ்டஸ்’.விமானத்துல பயணம் செய்யற மொத்தப் பிரயாணிகள் பதினைந்து பேர். அதில் ஏழு பேர் சமாதானக் குழுவில் இடம் பெற்றுள்ள எம்.பி.க்கள். மீதி எட்டுப் பேர் சாதாரண பயணிகள்.

விமானம் புறப்பட்டு நிலையான உயரத்துக்கு வந்ததும்– வஹிதா ‘டாபீஸ்’ உபயோகிப்பா. மயக்க மருந்து கலக்கப்பட்ட அது வாய்குள்ளே கரைஞ்சதுமே எல்லோரும் தலை தொங்கி தூங்க ஆரம்பிச்சுடுவாங்க… இது திட்டத்தோட முதல் கட்டம்…”

சென் மறுபடியும் ஒரு வாய் ‘ஸ்காட்சை’ மென்றுவிட்டுத் தொடர்ந்தார். “திட்டத்தோட ரெண்டாவது கட்டம் என்னோட பங்கு. டெல்லி ‘ஏர்போர்ட் கண்ட்ரோல் டவர்’ ஆபீஸரை நான் ‘மைக்ரோ போன்’ல தொடர்புகொண்டு– பயணிகள்ல ரெண்டு பேர் விமானத்தைக் கடத்த முயற்சிக்கிறதா சொல்வேன். உடனே, துவாரகேஷ் என்கிட்டே இருந்து மைக்ரோ போனை வாங்கி– தன்னோட மிமிக்ரி திறமையால் குரலை மாத்தி ஒரு கடத்தல் பேர்வழி மாதிரி பேசுவார்.

ஏழு எம்.பி.க்களையும், எட்டு பயணிகளையும் பணயமா வெச்சு…நிறைவேத்த முடியாத சில கோரிக்கைகளை முன்னாடி வைப்பார். பேச்சுவார்த்தை நடந்திட்டிருக்கும்போதே ஏழு எம்.பி.க்களும், ஆறு பயணிகளும்… மயக்கத்திலேயே சுட்டுக் கொல்லப்படுவாங்க. அதுல ரெண்டு பயணிகளை மட்டும் சுடாம நிறுத்துவோம். இந்தத் திட்டத்தைப் பொறுத்த வரைக்கும் அவங்கதான் கடத்தல்காரர்கள். அவங்கதான் எம்.பி.க்களையும், பிரயாணிகளையும் சுட்டுக்





கொன்னவங்க.

விமானம் ஸ்ரீநகர் போய் சேர்ந்ததும், 'கோ பைலட்' துவாரகேஷ், ஸ்ரீநகர் கண்ட்ரோல் பவர் ஆபீஸரிடம் தொடர்புகொண்டு அதே மிமிக்ரி குரலில்... கோரிக்கைகளை வெச்சு மிரட்டணும். அப்படி மிரட்டிகிட்டு இருக்கும்போதே நானும், துவாரகேஷும்... கைகலப்புல ஈடுபடுவோம். விமானத்தோட கண்ணாடி ஜன்னல்களை உடைப்போம்.

விமான நிலைய அதிகாரிகள்... கடத்தல்காரர்களோடு நாங்க சண்டை போடறதா நினைப்பாங்க. ஒரு அஞ்சு நிமிஷ அமளிக்குப் பின்னாடி அந்த ரெண்டு பயணிகளையும் நாங்களே சுட்டுக் கொன்னுட்டு... உயிருக்குப் பயந்து தப்பி வர்ற மாதிரி... சீருடையைக் கிழிச்சுக்கிட்டு ஓடி வருவோம். வஹிதா இன்னும் ஒரு படி மேலே போய் வெறும் பெட்டிகோட், பிராவோடு ஓடி வருவா..."

பாபுராவ் சிரித்தான்.

"காட்சி தத்ரூபமா இருக்கும்..."

"விமான நிலைய அதிகாரிகளிடமும், போலீசிடமும்... நாங்க ஒரே மாதிரியான 'ரிப்போர்ட்'டைச் சொல்லுவோம். அதாவது, விமானம் நடுவானத்தில் இருக்கும்போதே அந்தக் கடத்தல் புள்ளிகள்... ஏழு எம்.பி.க்களையும், ஆறு பிரயாணிகளையும் சுட்டுத் தள்ளியதாகவும்– ஸ்ரீநகருக்கு விமானம் வந்ததும் எங்களைப் பணயமா வெச்சு... தப்பிக்க முயற்சி பண்ணும்போது– நாங்க தாக்க ஆரம்பிச்சு... அவங்களோட துப்பாக்கிகளைக் கைப்பற்றி– தற்காப்புக்குச் சுட்டதாகவும் சொல்லிவிடுவோம்.

விமானத்துக்குள்ளே உண்மையா என்ன நடந்ததுங்கிறதைச் சொல்ல ஒரு எம்.பி.யோ... ஒரு பயணியோ உயிரோடு இருக்கமாட்டாங்க. நாங்க முணு

பேரும் எதைச் சொல்றோமோ... அதைத்தான் மத்தவங்க நம்பி ஆகணும்..."

அறையில் சிறிது நேரம் மவுனம் நிலவியது.

உஸ்மான் எல்லோரையும் ஒரு தடவை பார்த்துவிட்டுக் கேட்டான். "திட்டத்துல எங்கேயாவது பிசிறு தட்டுதா...?"

வஹிதா 'ஸ்காட்ச்' தம்ளரை எடுத்து- இரண்டு உள்ளங்கைகளாலும் உருட்டிக்கொண்டே உஸ்மானை ஏறிட்டாள்.

"திட்டம் துல்லியம். யாருமே நம்பக்கூடிய மாதிரிதான் இருக்கு. ஆனா, 'பிளைட்'டுக்குள்ளே போறதுக்கு முந்தி ஒரு சில சங்கடங்கள் இருக்கு."

"சொல்லு..."

"மூணு துப்பாக்கியையும் வெச்சு... கொண்டை போட்டுப் பார்த்தேன். வழக்கத்துக்கு மாறா... கொண்டை பெரிசா இருக்கு. பாதுகாப்பு அதிகாரிகள் திடீர்னு சந்தேகப்பட்டுட்டா...?"

"இது அநாவசிய சந்தேகம். வழக்கமாப் போடற கொண்டையை அவ்வளவு உன்னிப்பா யாரும் கவனிக்கமாட்டாங்க..."

"அந்தக் கொண்டை விஷயம் எனக்குக் கொஞ் சம் உறுத்தலாவே இருக்கு. கேப்டன் நீங்க என்ன நினைக்கறீங்க...?"

"உஸ்மான் சொல்ற மாதிரி... இது சாதாரண விஷயம். 'செக்யூரிட்டி ஆபீஸர்' அத்வால் அந்தக் காலை... நேரத்துல... பேப்பரைப் பிரிச்சு வெச்சுகிட்டு உட்கார்ந்துக்குவார். சபல 'கேஸ்' வேற. பக்கத்துல யாரும் இல்லைன்னு... கன்னத்துல லேசா தட்டி... வழிஞ்சுடுவார்..."



"நாளைக்கு வர்றது அத்வால்தானா...?"

"ஆமா..."

"கேப்டன்! பயணிகளோட 'டிரிப் ஷீட்'டை வெச்சிருக்கீங்களா?"- பாபுராவ் கேட்க...

'பைலட்' சென் எடுத்துக் கொடுத்தார்.

அவர் வாங்கி கணினியில் அடித்து - பிரயாணிகளின் பெயர்களை வாய்விட்டு மெதுவான குரலில் படித்தார்.

"மிஸ்டர் குலாம் மொய்தீன், மிஸ்டர் ஜவகர், மிஸஸ் மைத்ரேயி ஜவகர், மிஸ் செர்ரி, மிஸ்டர் சங்கர்தத், மிஸ்டர் சையத் அலி, மிஸஸ் ஜரினா சையத் அலி, மிஸ்டர் அம்பரிஷ். இந்த எட்டு பேர்ல... கடத்தல் பேர்வழிகளா யார் யாரை உருவாக்கப் போறோம்...?"

"சங்கர்தத்... அம்பரீஷ்..."

– சென் சொன்னார்.

"அவங்களை ஏன் தேர்வு பண்ணி இருக்கீங்க...?"

"ரெண்டு பேருமே இளசு. சங்கர்தத்துக்கு வயசு இருபத்தஞ்சு. அம்பரீஷுக்கு முப்பது. 'லாஜிக்கா' கடத்தல் பேர்வழிகளுக்குப் பொருந்துவாங்க..."

"பெண்கள் மொத்தம் மூணு பேர். அதுல ரெண்டு, புருஷனோட வருது... இளம் ஜோடி! மிஸஸ் மைத்ரேயி அண்ட் மிஸஸ் ஜரினா..."

"தேனிலவு பயணம்னு நினைக்கிறேன்... பாவம்..."

"மிஸ் செர்ரி... அநேகமா கல்லூரி மாணவியா இருக்கலாம்."

"பயணிகள்லே அதிக வயசானவர் குலாம் மொய்தீன்தான்."

"என்ன வயசு...?"

"அறுபத்தி ரெண்டு."

"அப்படின்னா ஒரே தோட்டா போதும்..."

"அந்த ஒரு தோட்டாவைக்கூட எதுக்காக வீண் பண்ணணும்? மயக்கமா கிடக்கிற கழுத்துக் குழியில பெருவிரலை வெச்சு ஒரு நிமிஷத்துக்கு அழுத்திக்கிட்டாப் போதும்... சுவாசப்பைக்கு காத்துப் போகாம. 'கக்... கக்'ன்னுட்டே உயிரை விட்டுடுவார்."

துவாரகேஷ் சிரித்துக்கொண்டே சொல்ல–

உஸ்மான் 'ஸ்காட்ச்' பாட்டிலை எடுத்து மறுபடியும் தம்ளர்களில் ஒரு 'ரவுண்டு' ஊற்றியபடியே உதட்டை அசைத்தான்.

"இந்தத் திட்டம், வெண்ணெயைக் கத்தியால் வெட்டின மாதிரி கச்சிதமா நிறைவேறினா... ஏற்கெனவே குடுத்த பணத்துல இருபது சதவிகிதம் போனஸா உங்களுக்குக் கிடைக்கும்."

"சியர்ஸ்..." என்று ஆரவாரித்தார் 'பைலட்' சென்.

## 4

**வி**மான நிலையம். விடியற்காலை நாலரை மணி.

லவுஞ்சில் போடப்பட்டிருந்த சொகுசு நாற்காலிகளில் டெல்லி– ஸ்ரீநகர் போகும் வாயுதூத் விமானத்திற்காகக் காத்திருந்தது, அந்தச் சிறிய கும்பல்.

ஒரு நாற்காலியில் உட்கார்ந்திருந்த மைத்ரேயி, கணவனின் கை சில்மிஷம் தாங்காமல் சிணுங்கினாள். காதோரமாய் கிசுகிசுத்தாள்.



"கிள்ளாதீங்க... எப்படியோ இருக்கு..."

"எப்படி இருக்காம்...?"

"கூச்சமா இருக்கு..."

"புடிச்சிருக்கா... இல்லையா?"

"ம்... என்ன கேட்டீங்க...?"

"புடிச்சிருக்கா, இல்லையா...?"

"புடிச்சிருக்கு... ஆனா...?"

"ஆனா...?"

"இங்கே வேண்டாமே..."

"பின்னே... எங்கே...?"

"காஷ்மீர் போனதும்..."

"அவ்வளவு நேரம் என்னால தாக்குப் பிடிக்க முடியாதே...?"

ஜவகர்க்குப் பக்கத்தில் கண்மூடித் தூங்குவது போல் உட்கார்ந்திருந்த குலாம் மொய்தீன் சிரித்தார்.

இந்தியில் கேட்டார்.

"தம்பி, கல்யாணமாகி ஒரு வாரம், பத்து நாள் இருக்குமா...?"

ஜவகர் திடுக்கிட்டுப் போய் அவரைப் பார்க்க – அவர் இன்னமும் கண்களை மூடிக்கொண்டே கேட்டார்.

"காஷ்மீருக்குப் போறீங்களா...? அற்புதமான சீஸன்..."

"ஸ... ஸார்...!"

"ஏன் தம்பி, உன் குரல் நடுங்குது...? புதுப் பெண்டாட்டியைக் கொஞ்சறது ஒண்ணும் தப்பில்லை...! நானும் உன்னோட வயசைக் கடந்து வந்தவன்தானே...?"

"ஸாரி ஸார்... உங்க தூக்கத்தைக் கெடுத்துட்டேனா...?"

"நோ... நோ...! உங்க ரெண்டு பேரோட சந்தோஷத்தைப் பார்த்து நானும் சந்தோஷப்பட்டுக்கிட்டு இருந்தேன்... காஷ்மீர்தானே போறீங்க...?"

"ஆமா..."

"உன் பேர்...?"

"ஜவகர்."

"வேலைக்குப் போறியா...?"

"இல்லை... தொழில்..."

"ம்..."

பதிலுக்கு ஜவகர் தலையாட்டிக்கொண்டு இருக்கும்போதே போலீஸ் பூட்ஸ் சத்தங்கள் சூழ- வெள்ளை வெளேரென்ற கதர் ஜிப்பாக்களிலும்- வேஷ்டிகளிலும் - ஏழு பேர் வந்துகொண்டிருந்தார்கள். எல்லோருடைய கழுத்துகளிலும் லில்லி மலர் மாலைகள்.

"யார் இவங்க...?"

ஜவகர் கேட்டான்.

குலாம் மொய்தீன் சொன்னார்.

"எம்.பி.க்கள்...! போர் நிறுத்த சமாதானக் குழு உறுப்பினர்கள்."

"நம்ம விமானத்துலதான் வர்றாங்களா...?"

"ஆமா...!"

லவுஞ்சின் இன்னொரு பக்கம் போடப்பட்டிருந்த குஷன் நாற்காலிகளுக்கு அந்த ஏழு பேர்களையும் கூட்டிக்கொண்டு போனார்கள் போலீசார்.

காத்திருந்த பத்திரிகையாளர்கள் சடச்சடவென சூழ்ந்து- காமிரா பிளாஷ்களை ஒளிர வைத்தார்கள். சமாதானக் குழுத் தலைவர், எல்லோருக்கும் வணக்கம் சொல்லி-



நாற்காலியில் உட்கார்ந்தார்.

நிருபர்கள் நோட்டும், பேனாவுமாய்- கேள்விகளைத் தொடங்கினார்கள். "உங்கள் சமாதான முயற்சிக்கு எங்கள் வாழ்த்துகள். இந்தக் குழுவிற்கு நீங்கள் தலைவராய் இருப்பது பற்றி என்ன நினைக்கிறீர்கள்...?"

"பெருமித உணர்வோடு இருக்கிறோம்..."

"போர் நிறுத்த முயற்சிக்காக உங்கள் குழு என்னென்ன செய்யும்?"

"அந்தந்த நாட்டு ராணுவ அமைச்சர்களோடும், பாராளுமன்ற உறுப்பினர்களோடும் கட்டம் கட்டமாய் பேச்சுவார்த்தை நடத்துவோம்..."

"உங்களுடைய சமாதானக் குழுவைப் பற்றி எதிர் கட்சிகள் மட்டரகமாக விமர்சித்துள்ளார்களே...?"

"மட்டரகம் என்றால்...?"

"இந்தியாவின் தன்மானத்தை அடகு வைப்பதற்காக ஏழு பேர் செல்கிறார்கள். உலக அரங்கில் இந்தியாவின் கவுரவம் பாதிக்கப்படும்- இந்திய ராணுவம் கோழைகளின் ராணுவம்... என்று."

முன்ஷிராம் கையை உயர்த்தி நிருபரை அமர்த்தினார்.

"எந்த எதிர்க்கட்சித் தலைவர் அப்படிச் சொன்னார்...?"

"ஜெயின் தாக்கரே..."

"அவர் ஒரு எதிர்க்கட்சிக்கு அரசியல் ரீதியாக தலைவராக இருந்தாலும்... தொழிலதிபர். அரசியலை வைத்தே பணம் சேர்த்து பல தொழிற்சாலைகளில் பங்குதாரராக இருப்பவர். நம் நாட்டு ராணுவ ரகசியங்களை அமெரிக்க ஒற்றர் மூலம் தெரியப்படுத்தினார் என்கிற வழக்கு இன்னமும் சிகாகோவில் உள்ளது.

இந்தியாவில் போர் வர வேண்டும்... அதன் மூலமாக அத்தியாவசிய பொருள்களின் விலைகள் பத்து மடங்கு உயர வேண்டும் என்று ஆசைப்படுகிறவர். அத்தியாவசியப் பொருள்களின் விலை உயர்ந்தால்தானே ... அவருடைய இரும்புப் பெட்டி நிறையும்?"

"ஜெயின்தாக்கரே இப்படிச் பேசியதற்கு... அரசு நடவடிக்கை எடுக்குமா...?"

"ஆலோசித்து செய்யும்."

"இது எவ்வளவு நாள் பயணம்?"

"பதினைந்து நாள்..."

"அண்டைய நாடுகள் இந்தியாவின் மேல் வன்மமும், ஆத்திரமுமாய் இருக்கும்போது... அங்கே செல்வது உங்கள் உயிருக்கும், உறுப்பினர்களின் உயிருக்கும் ஆபத்து ஏற்படாதா?"

முன்ஷிராம் கேள்வி கேட்ட அந்த நிருபரைப் பார்த்து புன்னகைத்தார். "என்னைப் பொறுத்தவரைக்கும் இந்த சமாதானப் பயணம் ஒரு வேள்வி மாதிரி. இதில் எங்கள் உயிர்கள் பறிக்கப்பட்டால் சந்தோஷமடைவோம்... சமாதானத்திற்காகப் போகிறோம் சாவு எதிர்ப்பட்டாலும் கலங்கிவிடமாட்டோம்..."

"எந்தெந்த நாடுகளுக்குப் போகிறீர்கள்?"

"முதலில் நேபாளம்... பின்னர் பாகிஸ்தான்... கடைசியாக சீனா."

"பாகிஸ்தானில் உங்கள் குழுவுக்கு எதிர்ப்பு அதிகம் இருக்கும் என்று சொல்லப்படுகிறதே...?"

"உள்ளூரிலேயே எதிர்ப்பு இருக்கும்போது... அங்கே எதிர்ப்பில்லாமல் இருக்குமா...? எல்லாவற்றையும் எதிர்பார்த்துத்தான் போகிறோம்..."



லவுஞ்ச் ஸ்பீக்கரில் அறிவிப்பு கேட்டது.

"வாயுதூத் விமானத்தில் ஸ்ரீநகர் செல்ல இருக்கும் பிரயாணிகள் தங்கள் சுமைகளோடு 'செக்கிங் ஸ்பாட்'டுக்கு வரும்படி கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்."

நாற்காலிகளில் காத்திருந்த எட்டுப் பிரயாணிகளும் தத்தம் உடைமைகளோடு எழுந்தார்கள்.

'ஏர்போர்ட் லவுஞ்' கடிகாரத்தில் மணி 4.45.

## 5

அதே நேரம்...

விமான நிலையத்தின் பணி அறை.

வலது கையில் டீ கப்பும், இடது கையில் புகையும் சிகரெட்டுமாய் எதிரெதிரே உட்கார்ந்திருந்தார்கள்... 'பைலட்' சென்னும், 'கோ- பைலட்' துவாரகேஷும்.

"அறிவிப்பு குடுத்துட்டாங்க போலிருக்கே...?"

"ம்..."

"வஹிதா வந்துட்டாளா...?"

"அப்பவே..."

"திட்டம் 'ஓர்க் அவுட்' ஆகுமா...?"

"கண்டிப்பா ஆகும் கேப்டன்... ஏன் உங்களுக்கு சந்தேகம்?"

"நேரம் நெருங்க நெருங்க ஒரே... டென்ஷனா இருக்கு. கொஞ்சம் குளறுபடி நேர்ந்தாலும்... எல்லாமே போச்சு..."

"ஒண்ணுமே ஆகாது..."



"சினிமா ஸ்டண்ட் மாஸ்டரைக் கல்யாணம் பண்ணினது தப்பா போச்சு."

"ஏன்?"

"பெட்ரூமுக்கு வர்றதுக்கு கண்ணாடி ஜன்னலை உடைச்சுகிட்டு உள்ளே குதிக்கிறார்."

– எஸ். பொருநை பாலு,
நெல்லை.

"தோசைக் கல்லை கால்ல போட்டுட்டார் என் கணவர்."

"அடடா... அப்புறம்?"

"இட்லி மாதிரி வீங்கிடுச்சு."

– வி. விஜயலெட்சுமி,
அய்யம்பேட்டை.





"நடிகையோடு சேர்ந்து சாமியார் கெட்டுப் போயிட்டாரா?"

"பின்ன... துறவறத்தை 'டைவர்ஸ்' பண்ணிட்டேன்னு சொல்றாரே!"

– பி.ஜி.பி.இசக்கி,
அகஸ்தியர்பட்டி.



வஹிதா–

உயர்த்திப் போட்ட கொண்டையோடு உள்ளே வந்தாள்.

"குட்மார்னிங்..."

"குட்மார்னிங்... வா வஹிதா. உட்கார்... டீ குடிக்கிறியா...?"

"வேண்டாம்... இப்பத்தான் சாப்பிட்டேன். லவுஞ்சிக்குப் போய்ப் பார்த்தீங்களா...? உஸ்மானும், பாபுராவும்... வழியனுப்ப வந்தவர்கள் மாதிரி உட்கார்ந்திருக்காங்க..."

"அப்படியா...?"

"ஆமா..."

"எதுக்காக வந்திருக்காங்க...?"

"விமான நிலைய சூழலை கண்காணிக்கத்தான்..."

"நீ அவங்களைப் பார்த்து ஏதாச்சும் பேசினியா...?"

"கண்டுக்கவே இல்லை. அவங்களும் கையில ரெண்டு

சந்தன மாலைகளை வெச்சுகிட்டு, வழியனுப்ப வந்தவங்க

கோலத்துல நின்னுட்டிருக்காங்க..."

வெளியே 'ஜிந்தாபாத்' கோஷம் கேட்டது.

"எம்.பி.க்களை வழியனுப்ப ஒரு சின்னக் கும்பல்

வந்திருக்கு. அந்தக் கும்பல் போடற சத்தம்தான் இது..."

"ஆகாயத்தில் நடக்கப் போகிற அந்த சாகஸத்துக்கு

இன்னும் எவ்வளவு நேரம் இருக்கு...?"

"நாற்பது நிமிஷம்..."

"இன்னிக்கு சாயந்தரம் பத்திரிகைகளில்– எல்லாப் பக்கங்களிலும் அடைத்துக்கொண்டு இந்தச் செய்திதான் அடிபடப்போகுது..."

வெளியே லவுஞ்சில் இரண்டாவது அறிவிப்பு கேட்டது.

மூன்று பேரும் புறப்பட எழுந்தார்கள்.

# 6

**ல**வுஞ்ச் நாற்காலியில் உட்கார்ந்திருந்த பிரயாணிகள் எழுந்து 'செக்கப் ஸ்பாட்'டிற்குப் போக– சங்கர்தத் தன் கையில் இருந்த சிகரெட்டை ஆஷ்டிரேயில் இட்டு நசுக்கிவிட்டு எழுந்தான். கால்களுக்குக் கீழே வைத்திருந்த ஏர்பேக்கை எடுத்துத் தோளில் சரித்துக்கொண்டவனை – அந்த அழகான இளம் பெண் ஏறிட்டாள்.

"உங்க கர்ச்சீப்பை விட்டுட்டுப் போறீங்களே...?"

நாற்காலியைப் பார்த்தவன் "ஓ" என்று நெற்றி சுருக்கி, கைக்குட்டையை எடுத்துக்கொண்டு அந்தப் பெண்ணைப் பார்த்து "தாங்க்யூ" என்றான்.

"நோ மென்ஷன் பிளீஸ்..." என்றவள், குரலைத் தாழ்த்திக்கொண்டு கேட்டாள்.

"நீங்க 'பாஸ்கெட் பால்' வீரர் சங்கர்தத்தானே...?"

அவன் பற்கள் தெரிய சிரித்தான்.

"எப்படி சரியா கண்டுபிடிச்சீங்க...?"

"ஆறு மாசத்துக்கு முன்னாடி டி.வி.யில உங்க பேட்டி பார்த்தேன். பெயர், முகம் ரெண்டுமே மனசுல பதிவாயிடுச்சு..."

"ஒரு கிரிக்கெட் வீரரை ஞாபகம் வச்சுக்கிறது சுலபம். என்னை எப்படி...? அதுவும் ஆறு மாசத்துக்கு முன்னாடி ஒளிபரப்பான... என்னோட பேட்டியைப் பார்த்து...?"



"ஏன்... ஞாபகம் வெச்சுக்கக்கூடாதா?"

"வெச்சுக்கலாம்... தாங்க்யூ வெரிமச்...! நான் ஒரு சாதாரண வீரன்... இன்னமும் அதிகமாப் பிரகாசிக்கலை."

"அதிகமா பிரகாசிக்கலைன்னு எதை வெச்சு சொல்றீங்க...?"

"கிரிக்கெட்ல டெண்டுல்கர் ஞாபகத்துக்கு வர்ற மாதிரி... பாஸ்கெட் பால்னு சொன்னதுமே... என்னோட ஞாபகம் வரணும்..."

"அப்படி வர என்னோட மனப்பூர்வ வாழ்த்துகள்..."

"தேங்க்யூ..."

"இது மூணாவது தடவை..."

"எது...?"

"தேங்க்யூ சொல்றது..."

சங்கர்தத் சிரித்துவிட்டுக் கேட்டான்.

"உங்க பேரைத் தெரிஞ்சுக்கலாமா?"

"சோனி..."

"மிஸ்...?"

"ஆமா..."

"இருக்கிறது ஸ்ரீநகர்தானே...?"

"ஆமா..."

"சொந்த ஊர்...?"

"டெல்லிதான்..."

"ஸ்ரீநகருக்கு என்ன விஷயமாப் போறீங்க?"

"அங்கே டூரிஸத்துல எனக்கு 'ரிசப்ஷனிஸ்ட்' உத்தியோகம்... லீவு கிடைக்கும் போதெல்லாம் டெல்லிக்கு வந்துட்டுப் போயிடுவேன்..."

"நீங்க ரிசப்ஷனிஸ்ட்டா...! அதான் அழகா

இருக்கிங்க...?"

"நோ... நோ... நான் அழகா இருக்கிறதுனாலத்தான்... அங்கே 'ரிசப்ஷனிஸ்ட்' வேலையே கிடைச்சுது..."

"மடக்கிட்டீங்க... 'செக்கப் ஸ்பாட்டு'க்குப் போலாமா?"

"வாங்க..."

லவுஞ்சில் நடந்தார்கள். சற்று தூரத்தில் இருந்த கும்பலைப் பார்த்துவிட்டு சொன்னாள் சோனி, "இன்னிக்கு நாம போற வாயுதூத்ல யாரோ மந்திரியும் வர்றாங்க போலிருக்கே...?"

"மந்திரி இல்லை எம்.பி.க்கள். ஏதோ சமாதானத் தூதுக் குழுவாம்."

"எம்.பி.ங்க சமாதானத்துக்காகத் தூது போறாங்களா...?"

"ஏன் போகக்கூடாதா...?"

"இவங்க பாராளுமன்றத்துல போட்டுக்கற சண்டையைத் தீர்க்கிறதுக்கே ஒரு சமாதானக் குழுவை ஏற்படுத்தணும்..."

"ஆமா..."

தன் முதுகுக்குப் பின்னால் ஒலித்த ஆண் குரல் கேட்டு சட்டென்று திரும்பினாள் சோனி.

கையில் ஒரு சிறிய சூட்கேஸோடு அந்த இளைஞன் தெரிந்தான். சோனி திரும்பிப் பார்த்ததும் புன்னகைத்தான்.

"எல்லாப் பத்திரிகைகளிலேயும் தலைப்புச் செய்தியா போட வேண்டியது இது. சர்வ சாதாரணமா சொல்லிட்டுப் போறீங்களே...? நீங்க வாயுதூத்தா...? நானும் அதுக்குத்தான்... என் பேர் அம்பரிஷ்."



மூன்று பேரும் சகஜபாவமாய் நடந்தார்கள். 'செக்கப் ஸ்பாட்'டுக்குப் போவதற்குள் ஒருத்தரையொருத்தர் பரஸ்பரம் அறிமுகம் செய்துகொண்டார்கள். பின் ஓடுதளத்துக்குள் நுழைந்தார்கள்.

"அரசியல்வாதிகளை என்னதான் முயற்சி பண்ணினாலும் ரெண்டே ரெண்டு வகையாத்தான் பிரிக்க முடியும்னு ஜப்பானிய அறிஞர் இவான்கோ சொல்லி இருக்கார். இந்த ரெண்டு வகை என்னான்னு உங்களுக்குத் தெரியுமா...?"

அம்பரிஷ் கேட்க –

சோனியும், சங்கர்தத்தும் உதட்டைப் பிதுக்கினார்கள்.

"தெரியலையே...!"

"முதல் வகை – அயோக்கியர்கள், ரெண்டாவது வகை மோசமான அயோக்கியர்கள்..."

"தப்பு மிஸ்டர் அம்பரிஷ். உலகத்தில் இருக்கிற மத்த நாட்டு அரசியல்வாதிகளில் வேண்டுமானால் ரெண்டு வகை இருக்கலாம். நம் நாட்டில் மூன்றாவது வகையும் இருக்கிறார்கள்"– சோனி குறுக்கிட்டுச் சொல்ல...

"அதென்ன மூன்றாவது வகை...?"– சங்கர்தத் கேட்டான்.

"மல்யுத்தம் தெரிந்த மோசமான அயோக்கியர்கள்..."

சிரித்துக்கொண்டே இருட்டில் நின்றிருந்த – வாயுதூத் விமானத்தை நோக்கிப் போனார்கள்.

படிக்கட்டின் உச்சியில் நின்று– வருகிறவர்களுக்கு வணக்கம் சொல்லி உள்ளே அனுப்பிக்கொண்டிருந்தாள் வஹிதா.

விமானத்தின் 'காக்–பிட்' அறையில் 'ஹெட்போன்'களை தலையில் மாட்டிக்கொண்டு– கண்ட்ரோல் டவரின் 'கிளியர் ஆப்'– ஆணைக்காக காத்திருந்தார்கள். அரை நிமிடத்திற்கு

ஒருதரம் புன்னகைத்துக்கொண்டார்கள்.

சரியாய் ஐந்தரை மணிக்கு 'கிளியர் ஆப்' ஆணை கிடைத்தது. படி நகர்த்தப்பட– 'பிரொப்பல்லர்' வேகமாய் சுழல ஆரம்பித்தது.

## 7

**வா**யுதூத், வானத்தில் உயர்ந்தது.

'காக் பிட்' அறைக்குள் நுழைந்தாள் வஹிதா. பைலட் சென் கேட்டார்.

"என்ன வஹிதா... 'டிரிப் ஷீட்'படி எல்லாப் பயணிகளும் ஆஜரா...?"

"ஏழு எம்.பி.க்களும் ஆஜர். ஆனா... பயணிகள்ல... ரெண்டு பேர் வரலை..."

"யார்... யார்...?"

"மிஸ்டர் சையத் அலி அண்ட் மிஸஸ் ஜரினா சையத் அலி..."

"அப்படின்னா... கணக்குபடி பதிமூணு பேர்..."

"ஆமா..."

"திட்டத்தை ஆரம்பிப்போமா...?"

"ம்..."

துவாரகேஷ் 'பிளைட்'டின் 'கைரோ காம்பஸை' கையாண்டுகொண்டே தலையாட்டினான். விமானம் நல்ல உயரத்தில் பறந்தது.

'கண்ட்ரோல் டவரில்' இருந்த அதிகாரி தேசாய்– 'மைக்ரோ ரிஸீவர்' வழியாக தன் காது மடலை



ஸ்பரிசித்த வார்த்தைகளைக் கேட்டதும் திடுக்கிட்டுப் போய் நிமிர்ந்தார்.

"கேப்டன் சென்! நீங்கள் என்ன சொல்றீங்க...?"

"பயணிகளில் இரண்டு பேர்... துப்பாக்கிகளோடு எங்களுக்குப் பக்கத்தில் நின்றிருக்கிறார்கள்."

"கடத்தல்காரர்களா...?"

"மே... பி..."

'பட்'டென்று அடி விழும் சத்தம். தொடர்ந்து ஒரு செங்கல்லை மென்ற மாதிரி ரிஸீவரில் கரகரப்பான குரல்.

"மிஸ்டர் தேசாய்...! என்னிடமும், என் நண்பனிடமும் இப்போது மொத்தம் நான்கு துப்பாக்கிகள் இருக்கின்றன. அவைகளில் மொத்தம் இருபத்தி நாலு தோட்டாக்கள் இருக்கின்றன. இங்கே இருக்கிற எம்.பி.க்களையும், பயணிகளையும், விமான ஊழியர்களையும் சேர்த்தால் மொத்தம் பதினாலு பேர் இருக்கிறார்கள்.

ஒரு நிமிட நேரத்தில் இத்தனைப் பேரையும் எங்களால் பரலோகம் அனுப்ப முடியும். ஆனால், நாங்கள் அதை விரும்பவில்லை. எங்களுடைய கோரிக்கைகள் சில நிறைவேற்றப்பட வேண்டும். அதற்கு நீங்கள் ஏற்பாடு செய்தால்... இங்கே உள்ளவர்களின் உடம்பில் ரத்தம் தங்கும். இல்லையேல் விமானத்தில் தேங்கும்..."

ராணி முத்து சந்தா விவரம்

| | |
|---|---|
| இரண்டு ஆண்டு | ரூ. 275 |
| ஒரு ஆண்டு | ரூ. 150 |
| ஆறு மாதம் | ரூ. 80 |
| **வெளிநாடுகள்** | |
| ஒரு ஆண்டு | ரூ. 1225 |
| ஆறு மாதம் | ரூ. 615 |

பணம் அனுப்பவேண்டிய முகவரி:
மேலாளர்,
'ராணி முத்து',
சென்னை–600 007.

தேசாய் பதறினார்.

"பயணிகள் யாரையும் சுட்டுவிடாதீர்கள்."

"கோரிக்கைகளைக் கேட்கிறீர்களா...?"

"என்ன கோரிக்கைகள்...?"

"கோரிக்கை ஒண்ணு... ராணுவ மந்திரி சட்டர்ஜி அடுத்த ஒரு மணி நேரத்திற்குள் ராஜினாமா செய்ய வேண்டும். அந்நிய நாட்டுப் பிரச்சினைகளில் இந்தியாதான் தலையிடுகிறது என்கிற குற்றச்சாட்டை ஒப்புக்கொள்ள வேண்டும். கோரிக்கை ரெண்டு...எல்லையோரத்தில் ஊடுருவல் செய்ததாக பிடித்து வைத்திருக்கும் அந்நிய நாட்டு ராணுவ வீரர்களை உடனடியாக விடுதலை செய்ய வேண்டும்.

தொடர்ந்து குரல், கோரிக்கைகளை அடுக்கிக்கொண்டே போக– கட்டுப்பாட்டு அறை அதிகாரி தேசாய் திகைத்தார். 'என்ன இது பைத்தியக்காரத்தனமான கோரிக்கைகள்...?'

செங்கல் குரல் சிரித்தது. "இந்த விமானம் ஸ்ரீநகர் போய்ச் சேர்வதற்குள்– பாதி கோரிக்கைகளாவது நிறைவேற்றப்பட்டிருக்க வேண்டும். உடனடியாக ஏற்பாடு செய்யுங்க. என்ன... பேச்சையே காணோம்?"

"இந்தக் கோரிக்கைகளை நிறைவேற்றக் கொஞ்சம் அவகாசம் வேணும்."

"அவகாசம் எதற்கு?"

"என் மேலதிகாரிகளைத் தொடர்புகொள்ளணும். அவர்கள் சம்பந்தப்பட்ட தன் பெரிய அதிகாரிகளைத் தொடர்புகொள்ள வேண்டும்..."

"யார் யாரைத் தொடர்பு கொள்வீர்களோ... அது எங்களுக்குத் தெரியாது. இந்த விமானம் ஸ்ரீநகர் 'ஏர்போர்ட்டில்' இறங்கி நிற்கும்போது– எங்கள்



கோரிக்கைகள் நிறைவேற்றப்பட்டதை நீங்கள் நிரூபிக்க வேண்டும். இல்லையென்றால்... மதிப்பு வாய்ந்த ஏழு எம்.பி.க்களையும், நாலு பயணிகளையும், மூன்று விமான ஊழியர்களையும் இரக்கம் பாராமல் சுட்டுத் தள்ளுவோம். எங்கள் உயிர்களைப் பற்றி நாங்கள் கவலைப்படவில்லை. இறப்பதற்காகவே அனுப்பப்பட்டவர்கள் நாங்கள்..."

"சொல்வதைக் கேளுங்க... அவசரப்பட்டு எம்.பி.க்களையோ, விமானத்தில் இருக்கும் மற்றவர்களையோ சுட்டுவிட வேண்டாம். உங்க கோரிக்கைகள் உரிய இலாகாக்களுக்கு அனுப்பப்பட்டு பரிசீலனை செய்து..."

"மண்ணாங்கட்டி...! பதினாலு பேர்களுடைய உயிர்கள் எங்கள் கையில் இருக்கும்போது – பரிசீலனை என்ன வேண்டி இருக்கிறது? கோரிக்கைகள் நிறைவேற்றப்பட வேண்டும். பிரதமரும், ஜனாதிபதியும் இந்நேரத்திற்கெல்லாம் படுக்கையைவிட்டு எழுந்து– பல்லைத் தேய்த்துக்கொண்டு இருப்பார்கள். அவசரமாக தொடர்புகொள்ளுங்கள். அவர்கள் 'பெட் காப்பி' குடித்துக்கொண்டே எங்கள் கோரிக்கைகளை நிறைவேற்றி வைக்க முடியும்..."

"ஏற்பாடு செய்கிறோம், யாரையும் சுட்டுவிடாதீர்கள்."

"சுடமாட்டோம்... ஏழு எம்.பி.க்களும், பயணிகளும், இப்போது மயக்கத்தில் சாய்ந்து கிடக்கிறார்கள். இன்னும் மூன்று மணி நேரத்திற்கு அவர்கள் மரக்கட்டைகள்தான். நாங்கள் நினைத்த நேரத்தில் அவர்களைச் சுட்டுத் தள்ள முடியும்...! ஆனால் நாங்கள் அவசரப்பட்டுச் சுட்டுவிட மாட்டோம்.

எங்களுக்குக் கோரிக்கைள்தான் முக்கியம். பதினாலு பேர்களின் உயிர்கள் அல்ல. இனி உங்களோடு தொடர்பு கொள்ள முடியாது. ஸ்ரீநகர் 'கண்ட்ரோல் டவரு'க்குத் தகவலை அனுப்பிவிடுங்கள். நாங்கள் அங்கே

தொடர்புகொள்கிறோம்..."

'மைக்ரோ ரிஸீவர்' அணைக்கப்பட்டு 'கொர்ர்' என்ற சத்தம் கேட்டது. தேசாய் கத்தினார். "ஹலோ... ஹலோ..."

ரிஸீவர் குறட்டை விட்டது.

'ரேடார்' திரையைப் பார்த்தார். விமானம் புள்ளியாய் ஸ்ரீநகர் மார்க்கத்தில் போய்க்கொண்டிருந்தது தெரிந்தது.

தேசாய், டெலிபோனை உசுப்பிப் பெரிய அதிகாரிகளோடு தொடர்புகொள்ள ஆரம்பித்தார். வெள்ளைச்சீருடை, வியர்வையை உறிஞ்ச ஆரம்பித்தது.

# 8

ஸ்ரீநகர் விமான நிலையம் ஒரு போர்க்காலப் பதற்றத்தில் இருந்தது. நான்கைந்து தீயணைப்பு வண்டிகளும், ஆம்புலன்ஸ்களும் ஓடுதளத்தில் அரை வட்டம் போட்டுக்கொண்டு தயார் நிலையில் நின்றன. போலீஸின் ஆயுதப்படை அணிவகுப்பு ஒன்று தொலைவில் தெரிய– விமான நிலைய அதிகாரிகளும், கண்ணாடி அறைக்குள் கவலையான சம்பாஷனைகளில் இருந்தார்கள்.

விமானம் ஸ்ரீநகரை நெருங்கிக்கொண்டிருப்பது ராடர் திரையில் தெரிந்தது. கட்டுப்பாட்டு அறை மொகைதீனோடு அந்த செங்கல் குரல் பேசியது.

"ஸ்ரீ நகர் கண்ட்ரோல் டவர்..."

"எஸ்..."

"டெல்லி கண்ட்ரோல் டவரில் இருந்து தேசாய்



உங்களைத் தொடர்புகொண்டாரா...?"

"தொடர்புகொண்டார்..."

"எங்கள் கோரிக்கைகள் என்னவாயிற்று...?"

"உரிய அதிகாரிகளுக்கு அனுப்பப்பட்டுள்ளது."

"நீங்கள் உருப்படமாட்டீர்கள். இந்த அனுப்பப்பட்டுள்ளது... பரிசீலனையில் உள்ளது என்கிற வாக்கியங்களே எங்களுக்கு வேண்டாம். கோரிக்கைகள் உடனடியாக நிறைவேற்றப்பட வேண்டும்..."

"உங்கள் கோரிக்கைகள் சற்று சிக்கலானவை. நிறைவேற்ற அவகாசம் வேண்டும் என்று அதிகாரிகள் அபிப்பிராயப்படுகிறார்கள்."

"எங்கள் கோரிக்கைகள் சிக்கலானவை அல்ல... நியாயமானவை. உடனே நிறைவேற்றுவதில் காலதாமதம் செய்தால், நஷ்டம் உங்களுக்குத்தான். பதினாலு பேர்களும் பிணமாக..."

"அவசரப்பட வேண்டாம்..."

"நாங்கள் அவசரப்படக்கூடாது என்று நினைத்தால்... நீங்கள் எங்கள் கோரிக்கைகளை நிறைவேற்ற அவசரப்பட வேண்டும்..."

"உங்களில் யாராவது ஒருவர் பேச்சுவார்த்தைக்கு...?"

"பேச்சுவார்த்தையா...? நாங்கள் யாரையும் சந்திக்க விரும்பவில்லை. எங்கள் கோரிக்கைகள் நிறைவேற்றப்பட்டதாக அதிகாரப்பூர்வமாக தெரிந்தால் நாங்களே தற்கொலை செய்துகொள்வோம். கோரிக்கைகள் நிறைவேற்றப்பட்டதாக வெறுமனே சொன்னால் நாங்கள் நம்பமாட்டோம். எங்களிடம் உள்ள 'வயர்லெஸ் பிரீக்வென்ஸி'யில் எங்கள் மேலிடத்தைத் தொடர்புகொள்வோம்... அவர்கள் 'அக்மார்க்' முத்திரை

குத்தினால்தான் நாங்கள் நம்புவோம்..."

"தயவு செய்து நிதானமாக இருங்க. எங்கள் உயர் அதிகாரிகளிடம் இருந்து பதில் வரட்டும்..."

"பதில் வருகிற வரைக்கும் நாங்கள் என்ன செய்வது...? உங்கள் 'ஏர்ஹோஸ்டஸ்' வஹிதாவிடம் கெட்ட காரியம் ஏதாவது பண்ணிக்கொண்டு இருக்கட்டுமா...?"

விமான நிலைய கட்டுப்பாட்டு அதிகாரி மொகைதீன், வாயடைத்துப் போய் எதுவும் பேசத் தோன்றாமல் நின்றார்.

## 9

டெல்லி வெளி விவகார அமைச்சகத்தைச் சேர்ந்த உயர் அதிகாரி ஒருவர்– டெலிபோனில் காஷ்மீர் கவர்னரிடம் வெறி நாயாய் எரிந்து விழுந்தார்.

"பைத்தியக்காரத்தனமான கோரிக்கைகள்...! இதில் எந்த ஒரு கோரிக்கையையும் நிறைவேற்ற சாத்தியமே இல்லை. அந்த இரண்டு முட்டாள்களிடம் அரசாங்கம் அடிபணியத் தயாராக இல்லை..."

"அப்படியானால் விமானத்தில் இருக்கிற பதினாலு பேர்களின் கதி! முக்கியமாக அந்த சமாதானக் குழு எம்.பி.க்கள்...?"

"பதினாலு பேர்களையும் தந்திரமாகத்தான் விடுவிக்க வேண்டும்..."

"வாயுதூத் விமானத்தில் அது இயலாத காரியம்



ஸார்..."

"எதுவுமே முயற்சி செய்தால் முடியும்...! அந்தக் கடத்தல் புள்ளிகள் யார் என்கிற விவரம் கிடைத்ததா?"

"பைலட் சென் ஒரு தடவை பேசும்போது சொன்னார். அவர்கள் சங்கர்தத், அம்பரீஷ் என்கிற இரண்டு இளைஞர்களாம்..."

"நான்கு துப்பாக்கிகளோடு அவர்கள் எப்படி விமானத்திற்குள் போனார்கள்...? பாதுகாப்பு எப்படி அவ்வளவு மெத்தனமாக இருந்தது....?"

"புரியவில்லை..."

"விமானம் தரை இறங்கிவிட்டதா...?"

"இன்னும் இல்லை..."

"எப்போது இறங்கும்...?"

"இன்னும் பத்து நிமிடத்தில்..."

"நீங்கள் ஏர்போர்ட் போய் அந்தக் கடத்தல்காரர்களிடம் 'வயர்லெஸ்'ஸில் பேசிப் பாருங்கள்..."

"அவர்கள் ஒப்புக்கொள்ளாவிட்டால்...?"

"ஒப்புக்கொள்ளும்படி நீங்கள்தான் செய்ய வேண்டும்."

"ஸ்ரீநகர் விமான நிலைய அதிகாரிகளின் தகவல்படி அவர்களுடைய கோரிக்கைகள் நிறைவேற்றப்பட்டால்தான்..."

"கடத்தல்காரர்களுக்கு உற்சாகம் வரும்படியாக நடந்து கொள்ளாதீர்கள். பேச்சுவார்த்தைக்கு அவர்களைத் தயார் செய்துகொண்டே– விமானத்தில் இருப்பவர்களைக் காப்பாற்ற முயற்சி எடுத்துக்கொள்ள வேண்டும்..."

"ஏர்போர்டிற்கு இப்போதே நான் புறப்படுகிறேன்" –கவர்னர் ரிஸீவரை வைத்துவிட்டு எழுந்தார்.

# 10

**வா**யுதூத் விமானத்தின் அலுமினிய உடம்பு, வானத்தில் தெரிய ஆரம்பித்ததும் – ஸ்ரீநகர் விமான நிலையம் பரபரப்புக்குள் வீழ்ந்தது. போலீசார் பத்தடி தூரத்திற்கு ஒருவராய் நிறுத்தப்பட்டார்கள். தீயணைப்பு வண்டிகளின் ஏணிகள் உயர்த்தப்பட்டு, அதிகாரிகள் தயாராய் இருந்தார்கள். கட்டுப்பாட்டு டவரின் கண்ணாடி அறையில் வயர்லெஸ் 'ஸ்ஸ்ஸ்' என்று இரைந்தது.

ரிஸீவரில் செங்கல் குரல் கேட்டது.

"விமானம் ஓடு பாதையில் இறங்கலாமா?"

மொகைதீன் சொன்னார். "இறங்கலாம்..."

"விமானம் ஓடு பாதையில் இறங்கி நின்றதும்... உங்கள் தரப்பில் இருந்து எந்த விதமான வாகனமோ, ஆட்களோ விமானத்தை நெருங்கக்கூடாது..."


"சரி..."

"அதிரடி நடவடிக்கை எடுத்துப் பயணிகளைக் காப்பாற்றிவிடலாம் என்று நினைக்காதீர்கள். நீங்கள் எங்களுக்குப் பாதகமாக எந்த நடவடிக்கையை எடுத்தாலும் சரி... அது விமானத்தில் இருக்கிற அத்தனைப் பேருக்கும் பாதகமாக அமையும்..."

"தெரியும்..."

"அரசாங்கத்திடம் இருந்து ஏதாவது செய்தி வந்ததா...?"





"செய்தி ஏதும் வரவில்லை. ஆனால், இந்த மாநிலத்தின் கவர்னர் உங்களோடு பேசுவதற்காக – 'வயர்லெஸ்' அறையில் காத்திருக்கிறார்.

"பேச்சுவார்த்தையா...?"

"ஆமா..."

"இந்தப் பேச்சுவார்த்தைத்தானே வேண்டாமென்று சொன்னோம்..."

"அவர் உங்களோடு பேச விரும்புகிறார்..."

"நாங்கள் பேச விரும்பவில்லை. பேச்சுவார்த்தை என்பது நேரம் கடத்தி எங்களை மடக்க முயற்சிக்கிற ஒரு கோழைத்தனமான செயல் என்பது எங்களுக்குத் தெரியும். அந்த 'ரப்பர் பிஸினஸ்' எங்களிடம் வேண்டாம். எங்களுடைய கோரிக்கைகள் யுத்தக்கால அவசரத்தோடு – நிறைவேற்றப்பட வேண்டும். இல்லையென்றால் விமானத்தில் இருக்கும் பதினான்கு பேர்களையும் கொன்றுவிட்டு நாங்களும் தற்கொலை செய்துகொள்வோம். காஷ்மீர் கவர்னரை ஏதாவது ஒரு கட்டடத் திறப்பு விழாவில் கலந்துகொள்ளச் சொல்லுங்கள்..."

பேச்சு 'ரிஸீவரில்' கோபமாய் வழிந்துகொண்டிருக்க– கட்டுப்பாட்டு அறை அதிகாரியின் பார்வை– கண்ட்ரோல் டவரின் கண்ணாடிச் சதுரத்தின் வழியே வானத்தில் உயரம் இழந்துகொண்டிருந்த வாயுதூத் விமானத்திற்கு போயிற்று.

விமானம் ஓடுதளத்தின் கோடியில் தாழ்ந்தது. சக்கரங்களை மெல்லமாய் வெளியே நீட்டி– கான்கிரீட் ஓடு பாதையைப் பற்றிக்கொண்டு– இரைச்சலோடு வந்து நின்றது. 'பிரொப்பல்லர்'கள் ஓய்ந்து போயின.

வயர்லெஸ்ஸில் செங்கல் குரல் சிரித்தது.



"ஏர்ப்போர்ட்டைச் சுற்றிப் பயங்கர பந்தோபஸ்து செய்திருக்கிறீர்கள். இந்திய ராணுவமே வந்து சுற்றி வளைத்தாலும்... கோரிக்கைகள் நிறைவேற்றப்படாத நிலைமையில் பதினாலு பேர்களைக் காப்பாற்றவே முடியாது."

"கவர்னரோடு பேசுங்கள்..."

"மாட்டோம்..."

சொல்லிக்கொண்டு இருக்கும்போதே விமானத்திற்குள் அந்தக் கூக்குரல்கள் எழுந்தன.

"அம்பரிஷ்! அதோ... அந்த வஹிதாவைப் பார். எதையோ எடுத்து உன் மேல் வீச..."

"சலீர்..."

எதுவோ உடைந்தது.

பைலட் சென்னின் குரல். "துவாரகேஷ்...! நல்ல காரியம் செய்தாய்! அவனை அப்படியே அமுக்கிக்கொள்... நான் இவனைக் கவனிச்சிக்கிறேன்."

"டுமீல்..."

ரிவால்வர் சத்தம்.

"வஹிதா... நீ காபினுக்குள் ஓடிவிடு..."

துவாரகேஷின் குரல்.

"கேப்டன்! அவனையும் சுடுங்க... விட்டுடாதீங்க..."

மறுபடியும் 'ரிவால்வர்' கனைத்தது.

"டுமில்..."

வயர்லெஸ்ஸில் சில விநாடிகளுக்கு நிசப்தம்...

பிறகு மூச்சிரைப்போடு பைலட் சென் பேசினார்.

"கண்ட்ரோல் டவர்..."

"எஸ்..."

"அந்த ரெண்டு கடத்தல்காரர்களையும் சுட்டுவிட்டோம்..."

"அற்புதமான செயல்..."

"ஆனால், ஒரு அசம்பாவிதம் நேர்ந்துவிட்டது."

"என்ன... அசம்பாவிதமா...?"

"ஆமா... விமானம் நடுவானில் பறக்கும்போதே சங்கர்தத், அம்பரிஷ் என்று இரண்டு கடத்தல்காரர்கள்... ஏழு எம்.பி.க்களையும், நான்கு பயணிகளையும் துப்பாக்கியால் சுட்டுக் கொன்றுவிட்டார்கள்.

"என்னது?"

அதிகாரி அதிர்ந்தார்.

"ஆமாம்... அந்த இரண்டு பேருக்கும் கோரிக்கைகள் பெரிதில்லை. கோரிக்கைகள் நிறைவேற்றப்பட வேண்டும் என்பதில் அக்கறை இல்லை..."

"இப்போது விமானத்தில் யார், யார் உயிரோடு இருக்கிறார்கள்...?"

"நான், கோ– பைலட் துவாரகேஷ், ஏர்ஹோஸ்டஸ் வஹிதா..."

அடுத்த சில விநாடிகளில் – ஓடுதளத்தை விட்டு கொஞ்சம் தள்ளி – அவசர உணர்வோடு காத்திருந்த ஆம்புலன்ஸ் வேன்கள் – வேகமாய் பீறிட்டு வந்து விமானத்தைச் சூழ்ந்துகொண்டன.

விமானத்தின் இடுப்பில் 'ஸ்டேர்ஸ்' பொருத்தப்பட வஹிதா– அவிழ்ந்த கூந்தலும், கிழிந்த சேலையுமாய் – கீழே இறங்க... அவளைத் தொடர்ந்து சென்னும், துவாரகேஷும் வந்தார்கள்.

ஆம்புலன்ஸ் ஆட்கள் நான்கு பேர் ஸ்ட்ரேச்சரோடு உள்ளே போய் – ரத்தத்தில் நனைந்து வாய் பிளந்தவர்களை



ஒவ்வொருவராய் வெளியே கொண்டுவந்து, வேனுக்குள் கிடத்தினார்கள். காஷ்மீர் கவர்னர், இரண்டு போலீஸ் அதிகாரிகளின் உதவியோடு விமானத்திற்கு சென்று பார்வையிட்டார்.

கும்பல் சேரும் முன் ஆம்புலன்ஸ் வேன்கள் – பதிமூன்று பேர்களின் உடல்களோடு புறப்பட்டன.

## 11

பத்திரிகையாளர்களால் நெருக்குண்டார்கள் சென், துவாரகேஷ், வஹிதா மூன்று பேரும். விதவிதமான மைக்குகள் அவர்களுடைய முகத்திற்கு முன் நீட்டப்பட்டன.

"கடத்தல்காரர்களைச் சுட்டுத் தள்ளிய – இந்தச் செயல் விமானக் கடத்தல் வரலாற்றில் ஒரு சாதனையாகச் சொல்லப்படுகிறதே...? இதற்கு உங்கள் மூன்று பேரில் யார் காரணம் என்று நினைக்கிறீர்கள்...?"

"எங்களைப் பொறுத்தவரைக்கும் இது சாதனையே இல்லை. ஏழு எம்.பி.க்கள் உள்பட பயணிகள் அனைவரையுமே பலி கொடுத்திருக்கிறோம். இது ஒரு ஆழமான துயர சம்பவம். எல்லோரையும் காப்பாற்றி இருந்தால்– இதை ஒரு சாதனையாகச் சொன்னால்– நாங்கள் மகிழ்ச்சியுடன் ஏற்றுக்கொள்வோம். ஆனால், இப்போது நாங்கள் மட்டும் உயிர் பிழைத்தது... வெட்கமாகவும், வேதனையாகவும் இருக்கிறது."

"அவர்கள் எப்படி நான்கு துப்பாக்கிகளோடு உள்ளே வந்தார்கள்...?"

"பாதுகாப்பு அதிகாரிகள்தான்... இதற்குப் பதில் சொல்ல வேண்டும்..."

"பாதுகாப்பு அதிகாரிகளின் கவனக்குறைவு என்று வைத்துக்கொள்ளலாமா...?"

"எதிரிகளின் சாமர்த்தியமாகவும் நினைத்துக்கொள்ளலாமே...?"

"கடத்தல்காரர்களை எப்படி வீழ்த்தினீர்கள் என்பதைச் சொல்ல முடியுமா...?"

"ஏர்ஹோஸ்டஸ் வஹிதா எடுத்த ஒரு துணிச்சலான நடவடிக்கைதான் காரணம். விமானம் ஏர்போர்ட்டில் வந்து இறங்கி நின்றதும் வயர்லஸ் கருவியில் –

கடத்தல்காரன் ஒருவன் – கண்ட்ரோல் டவர் ஆபீஸரிடம் பேசிக் கொண்டிருந்தான். இன்னொருவன் கைகளில் இரண்டு ரிவால்வர்களோடு விமானத்தின் ஜன்னல் வழியே – குனிந்து ஏர்போர்ட்டைப் பார்த்துக்கொண்டிருந்த விநாடி– வஹிதா ஒரு பயணியின் பிரீப் கேஸை எடுத்து – கண் இமைக்கும் நேரத்தில் அவனை நோக்கி வீசினாள்.

பிரீப்கேஸின் முனை அவனுடைய நெற்றியை வசமாய் தாக்கி– அவன் அலறிக்கொண்டு சாய்ந்தான். உடனே 'கோ-பைலட்' துவாரகேஷ்– வீழ்ந்தவனை அமுக்கிக்கொண்டு ரிவால்வர்களைப் பறிக்க– நான் இன்னொருவனை சமாளித்தேன். கைகலப்பில் கண்ணாடி ஜன்னல்கள் உடைந்தன. அவர்கள் இருவரும் சுதாரித்துக்கொண்டு எங்களைத் தாக்கிச் சேதம் விளைவிக்க முயல– வேறு வழியில்லாமல் அவர்களைச் சுட்டுத்தள்ள



வேண்டியதாயிற்று..."

"அவர்களை உயிரோடு பிடித்திருந்தால்... இந்தக் கடத்தலுக்கு பின்னணியில் இருக்கும் ஆட்கள் யார் என்பதைக் கண்டுபிடித்து இருக்கலாமே?"

"கண்டுபிடித்திருக்கலாம். ஆனால், அவர்களை நாங்கள் சுட்டுத்தள்ளி இருக்காவிட்டால் எங்களை அவர்கள் கொன்றிருப்பார்கள்..."

"ஏழு எம்.பி.க்கள் கொல்லப்பட்டதற்குக் காரணம்... அரசியல் பகைதான் என்று நினைக்கிறீர்களா?"

"அதைப் போலீசார்தான் கண்டுபிடிக்க வேண்டும்."

"இது மாதிரியான கடத்தல் முயற்சிகள் பிற்காலத்தில் நடைபெறாமல் இருக்க – விமான நிர்வாகம் என்ன நடவடிக்கைகளை எடுத்துக்கொள்ள வேண்டும் என்று எதிர்பார்க்கிறீர்கள்...?"

"அவர்கள் புதிதாக எந்த நடவடிக்கையையும் எடுக்க வேண்டிய அவசியமில்லை. இப்போது கவனிக்கிற வேலையை– சற்று விழிப்போடு இருந்து கவனித்தால் போதும்..."

இரண்டு போலீஸ் அதிகாரிகள்– தோள்பட்டைகளில் மின்னும் நட்சத்திரக் குறிகளோடு – பைலட் சென், துவாரகேஷ், வஹிதாவை நெருங்கினார்கள்.

"உள்துறை அமைச்சரிடம் இருந்து ஒரு குறிப்பாணை வந்துள்ளது. சம்பவம் குறித்து முழு விசாரணையை உங்களிடம் நடத்த வேண்டும். அமைச்சர் உங்களுக்காக– கவர்னர் மாளிகையில் காத்திருக்கிறார்..."

மூன்று பேரும் அந்த அதிகாரிகளுக்குப் பின்னால் புறப்பட்டார்கள்.

# 12

ஸ்ரீநகர் கவர்னர் மாளிகைக்குள் கார் நுழைந்து அடர்ந்த மரங்களால் சூழப்பட்ட சிமெண்டு பாதையில் ஓடி கட்டடத்தில் ஒதுக்குப்புறமான பகுதிக்குப் போய் நின்றது.

பாலைவன அமைதி

துப்பாக்கிகளை ஊன்றிக்கொண்டு – 'சென்ட்ரி'கள் மட்டும் தெரிய– போலீஸ் அதிகாரிகளைத் தொடர்ந்து – சென், துவாரகேஷ், வஹிதா மூன்று பேரும் உள்ளே போனார்கள்.

இரண்டு பெரிய ஹால்களைக் கடந்து – மாடிப் படிகளில் ஏறி கனமான கதவைத் தள்ளிக்கொண்டு நுழைந்தார்கள்.

கருநீல வெல்வெட் சோபாக்களில் – உள்துறை அமைச்சரும், கவர்னரும் பக்கம் பக்கமாய் உட்கார்ந்திருந்தார்கள்.

'சல்யூட்' பண்ண முயன்ற – சென், துவாரகேஷை உள்துறை அமைச்சர் புன்னகையோடு கையமர்த்தினார்.

"இந்த நாடே உங்களுக்கு 'சல்யூட்' பண்ண வேண்டிய நிலைமையில் உள்ளது. உட்காருங்கள் கேப்டன்..."

சென் சிரித்தார்.

"நாங்கள் ஒன்றும் பெரிதாகச் செய்துவிடவில்லையே...?"



"இந்தக் காரியம் உங்களைப் பொறுத்த வரைக்கும்... சாதாரணமாக இருக்கலாம். இதனால் நாடு அடையப் போகிற நன்மை மிகப் பெரியது..."

"எம்.பி.க்களும், பயணிகளும் நன்றாகவே ஒத்துழைத்தார்கள். அவர்கள் இங்குதானே இருக்கிறார்கள்?"

"இங்கேதான் இருக்கிறார்கள்..." என்று சொன்ன கவர்னர்– போலீஸ் அதிகாரிகளைப் பார்க்க– அவர்கள் தலையசைத்து வேகமாய் நகர்ந்தார்கள்.

அடுத்த இரண்டு நிமிடங்களில்...

ஏழு எம்.பி.க்களும் –

ஆறு பயணிகளும் –

சின்னச் சின்ன புன்னகையோடு –

உள்ளே வந்தார்கள்.

கேப்டன் சென்னும், துவாரகேஷும் எல்லோரையும் பார்த்து கும்பிட்டார்கள்.

"உங்கள் ஒத்துழைப்பு இல்லாவிட்டால் இந்தத் திட்டத்தை நிறைவேற்றி இருக்கவே முடியாது. ரத்தச் சாயத்தை பூசிக்கொண்டு இறந்தது போல விழுந்து கிடப்பது அவ்வளவு சாதாரணமான காரியமில்லை. முக்கியமாக பெண்களுக்கு எங்களுடைய பாராட்டுதல்கள். விமானம் டெல்லியில் இருந்து புறப்பட்டதுமே... நாங்கள் சொன்ன திட்டத்திற்கு – உங்களில் சில பேர் மறுப்புத் தெரிவித்து – ஒத்துழைக்க மாட்டோம் என்று சொன்னார்கள்.

இந்திய தேசத்தில் ஊடுருவி இருக்கும்... அந்த நச்சு ஆணிவேரைக் கண்டுபிடிக்கும் இந்த அரிய முயற்சிக்கு உதவ

வேண்டும் என்று கேட்டுக்கொண்டபோது அவர்களும் ஒப்புக்கொண்டார்கள். உங்கள் பணி இத்தோடு முடிந்து போயிற்று. ஆனால், எங்கள் பணி இனிமேல்தான் ஆரம்பம். இன்னும் இரண்டே நாட்களில் அந்த நச்சு, ஆணிவேரைக் கண்டுபிடித்துவிடுவோம். அதுவரைக்கும் நீங்கள் இறந்தவர்களே..."

எம்.பி.க்களின் சமாதானக் குழுத் தலைவர் முன்ஷிராம், பைலட் சென் பக்கம் ஏறிட்டார். "இரண்டு நாட்களில் அந்த ஆணிவேரைக் கண்டுபிடித்துவிட முடியும் என்று நினைக்கிறீர்களா...?"

"கண்டிப்பாக...! இன்று மதியத்திற்குள் நாங்கள் மூன்று பேரும் டெல்லி போய்விடுவோம். அங்கு போனதுமே எதிரியின் கைத்தடிகளான உஸ்மான், பாபுராவ் இரண்டு பேர்களையும் சந்தித்து– அவர்கள் போட்டுக் கொடுத்த திட்டப்படி... ஏழு எம்.பி.க்களையும் – விமானத்தில் இருந்த பயணிகளையும் கொன்றுவிட்டதாக சொல்வோம்.

நாம் 'செட்டப்' செய்த சம்பவங்களை உண்மையென்று நம்பி பத்திரிகை– டி.வி.யில் செய்தி வெளியாகும். திட்டம் வெற்றிகரமாய் முடிந்தால், எதிரிகளின் மூலவர் எங்களைச் சந்திப்பதாகச் சொல்லி இருக்கிறார். அதன்படி நாங்கள் மூலவரை இன்றோ, நாளையோ சந்திப்போம். மூலவர் யார் என்பதையும் – இருப்பிடம் எது என்பதையும் நாங்கள் கண்டுபிடித்த பிறகு– அரசாங்கம் செயல்பட்டு, அந்த மூலவரைச் சிறைபிடிப்பது என்பது சுலபமில்லையா...?"

"அவர்கள் உங்களை நம்புவார்களா...?"

"நம்பித்தான் ஆக வேண்டும். ஏனென்றால், அவர்களைப் பொறுத்தவரை நாங்கள் எம்.பி.க்களையும், பயணிகளையும் கொன்ற குற்றத்தைச் செய்தவர்கள். குற்றவாளிகளான



நாங்கள்... அவர்களைக் காட்டிக் கொடுக்க முடியாது. காட்டிக் கொடுத்தாலும் மாட்டிக்கொள்வோம். இந்த மாபெரும் குற்றத்தைச் செய்ததன் மூலம்... அவர்களுக்கு நாங்கள் விசுவாசிகள். விசுவாசிகளை அவர்கள் நம்பாமல் இருப்பார்களா...?"

அம்பரிஷ் கேட்டான்.

"எதிரிகளில் மூலவரைக் கண்டுபிடித்து அரசாங்கம் கைது செய்துவிட்டால்... இந்த 'செட்டப்' திட்டம் ஜனங்களுக்கு உடனே தெரிந்துவிடும் இல்லையா?"

"ஆமாம்..."

"டி.வி., ரேடியோ, பத்திரிகை செய்தி தெரியப்படுத்தியதும் இரண்டு நாட்களுக்குப் பொதுமக்கள் – என்னையும், சங்கர்தத்தையும் கண்டபடி திட்டிக்கொண்டு இருப்பார்கள் இல்லையா...?"

உள்துறை அமைச்சர் ஒழுங்காய் கட்டின பற்களைக் காட்டிச் சிரித்தார்.

"இன்னும் இரண்டு நாட்களுக்குத்தான் நீங்கள் வில்லன்கள். பின் என்றென்றும் கதாநாயகர்கள். ஜனங்கள் அதற்குப் பின் சில மாதங்களுக்காவது உங்களைப் பற்றிப் பேசுவார்கள்..."

சென்னிடம் திரும்பினார் முன்ஷிராம்.

"நீங்கள் எப்போது டெல்லி புறப்பட்டுப் போகிறீர்கள்...?"

"இன்னும் ரெண்டு மணி நேரத்தில்..."

"டெல்லியில் உங்கள் முயற்சிகள் வெற்றிபெறட்டும்..."

முன்ஷிராம் கைகுலுக்கினார்.

## 13

டெல்லி.

துவாரகேஷ் வீடு. ஏர்போர்ட் காரில் இருந்து – கீழே இறங்கி வீட்டுக்குள் நுழைந்த துவாரகேஷை அலைய குலைய ஓடி வந்து கட்டிக்கொண்டாள் ஷாமினி.

"என்னங்க... உங்களுக்கொண்ணும் ஆகலையே...? செய்தியைக் கேட்டு நான் ஆடிப் போயிட்டேன்..."

துவாரகேஷ் கதவைச் சாத்தி தாழிட்டுவிட்டு- அதே வேகத்தில் அவளை இறுக்கி அணைத்து- நெற்றியில் மெல்ல முத்தமிட்டான்.

"எதுக்காகவும் ஆடிப்போகாதே ஷாமினி... விமானக் கடத்தல் சம்பவம், செய்தி எல்லாமே ஒரு 'செட்டப்' சமாசாரம்தான்..."

ஷாமினி தன் அழகிய கண்களை அகலமாய் விரித்தாள்.

"என்னது... 'செட்டப்'பா...?"

"ஆமா... இன்னும் ரெண்டு நாளைக்கு... டி.வி., ரேடியோ, பத்திரிகை... எல்லா 'மீடியா'விலும்... இந்தச் செய்திதான் வரும். ஆனா, அது பூராவும் பொய். இது ஒரு நாடகம், சபாக்களில் போடற மாதிரி..."

"எனக்கு ஒண்ணும் புரியலைங்க..."

"வா... இப்படி வந்து உட்கார். நான் இப்போ சொல்லப் போறதை வெளியே யாருக்கும்



சொல்லக்கூடாது..."

ஷாமினி ஆர்வமாய் தலையாட்ட– நடந்த விஷயங்களைச் சொல்ல ஆரம்பித்தான் துவாரகேஷ். அவள் முகத்தில் ஐந்து நிமிட நேரம் பிரமிப்பு அலைமோதியது.

"ஷாமினி ! ஆரம்பத்துல உஸ்மானும், பாபுராவும் எங்க மூணு பேரையும் சந்திச்சு – எம்.பி.க்களைக் கொல்றதுக்காக முப்பது லட்ச ரூபாய் தர்றதா சொன்னப்ப... நாங்க பணத்துக்காக ஆசைப்பட்டு திட்டத்தை நிறைவேத்த ஒத்துக்கிட்டோம். ஆனா, பக்கத்துல நாள் நெருங்க... நெருங்க... சொந்தத் தாயையே விபசாரத்துல ஈடுபடுத்தற மாதிரியான உணர்வு எங்க மூணு பேரையுமே தாக்க... மனசை மாத்திக்கிட்டோம்.

அவங்க கொடுத்த பணத்தை வாங்கிக்கிட்டு- திட்டத்துக்கு உடன்படுகிற மாதிரி நடிச்சுகிட்டே... ரகசியமா உள்துறை அமைச்சருக்குத் தகவல் அனுப்பி- தொடர்புகொண்டோம். இந்த 'மாஸ்டர் பிளானு'க்குக் கீழே ஒரு 'அண்டர் கிரவுண்ட் பிளானை'ப் போட்டோம். எம்.பி.க்களையும், பயணிகளையும் எங்களுக்கு ஒத்துழைப்பு குடுக்கச் சொன்னோம். கொடுத்தாங்க. திட்டம் இப்போ... அமோக வெற்றி..."

"இந்த 'அண்டர்கிரவுண்ட் பிளான்' யார் யாருக்குத் தெரியும்?"

"அரசாங்கத்துல இருக்கிற ஒரு சில முக்கியத் தலைவர்களுக்கு மட்டும்."

"எம்.பி.க்கள்– பயணிகளோட பிணங்களைக் கேட்டு அவங்க சொந்தபந்தங்க, ஆஸ்பத்திரிக்கு வருவாங்களே...? அவங்களை எப்படி சமாளிக்கப்போறீங்க?"

"இரண்டு நாள்தானே...? தீவிர பிணைப் பரிசோதனைக்குப்

பின்னாடிதான் கொடுக்கப்படும்னு... அவங்ககிட்டே சொல்லி சமாளிக்க வேண்டியதுதான்."

"சமாளிக்க முடியலைன்னா...?"

"ரொம்பவும் சிரமமா இருந்தா... அந்தக் குடும்பத்தை மட்டும் தனியா கூட்டிக்கிட்டுப் போய் உண்மையைச் செல்லிட வேண்டியதுதான்..."

"எதிரிகளோட மூலவர் யாருங்கிறதைக் கண்டுபிடிக்கிறதுதான் உங்களுக்கும், பைலட் சென்னுக்கும் உள்ள இறுதி வேலை... இல்லையா?"

"ஆமா..."

"எம்.பி.க்களும், பயணிகளும் உயிரோடு இருக்காங்கங்கிற உண்மை எதிரிகளோட முகாமுக்குப் போறதுக்கு முந்தி- அந்த மூலவர் யாருங்கிற உண்மை தெரிஞ்சாகணும்."

"ம்..."

"இது இப்போதைக்கு முடிகிற காரியமா எனக்குத் தெரியலைங்க. நீங்களும், காப்டனும் வீண் விவகாரத்துல மாட்டிக்கப்போறீங்க. எதிரிகளோட பலம் தெரியாமே... நீங்க ரெண்டு பேரும் களத்துல இறங்கினது சரியில்லை."

துவாரகேஷ் சிரித்தான்.

"எதிரிகளுக்குப் பலம் இருக்கலாம். ஆனா, பலம் இருக்கிற அளவுக்குப் புத்தி கிடையாது. நானும், கேப்டனும் அவங்களை ஜெயிக்கப் போறது புத்தியை வெச்சுத்தான். இன்னிக்கு ராத்திரி எட்டு மணிக்கு மேல் நானும், கேப்டனும் உஸ்மான்–பாபுராவை சந்திக்கப் போறோம். திட்டம் வெற்றிகரமா நடந்துட்டதா நினைச்சு... எங்களை மூலவர்கிட்டே கூட்டிட்டுப் போவாங்க. நாளைக்கு இந்நேரத்துக்குள்ளே- அந்தக் கூட்டமே 'லாக்கப்'புக்குள்ளே இருக்கும்."



ஷாமினி கணவனின் தோள்களை இறுகப் பற்றிக்கொண்டு அவன் மார்பில் சாய்ந்தாள்.

"எனக்கென்னவோ பயமா இருக்குங்க. அவங்களை நீங்க ஏமாத்தினது தெரிஞ்சிருந்தா...?"

"இதோ பார் ஷாமினி! இது பயப்படற நேரமில்லை. காரியத்துல துணிஞ்சு இறங்கணும். அரசாங்கம் பக்கபலமா இருக்கும்போது, நீ ஏன் பயப்படறே? எல்லாமே நல்லபடியா முடியும்."

ஷாமினியின் கன்னத்தை மெல்லத் தட்டிக் கொடுத்தான் துவாரகேஷ்.

அதே விநாடி டெலிபோன் கூப்பிட்டது.

போய் ரிஸீவரை எடுத்தான்.

"ஹலோ..."

"துவாரகேஷ்...?"

"எஸ்..."

"நான் உஸ்மான்...! திட்டத்தை நீங்களும், கேப்டன் சென்னும் துல்லியமா நிறைவேத்தி இருக்கீங்க. மேலிடத்துக்கு ரொம்பவும் சந்தோஷம். உங்களையும், கேப்டனையும் பார்க்கப் பிரியப்படுகிறார். முன்பே பேசியபடி இன்னைக்கு ராத்திரி அவரைச் சந்திப்போமா?"

"ஆவலாய் இருக்கிறோம்..."

## 14

சரியாய் எட்டரை மணிக்கு 'விதர்ப்பா சவுக்'கில் – ஆள் நடமாட்டம் அற்ற தெருவில் – அந்த சென்னும், துவாரகேஷும் காத்திருக்க – அந்த

வேன் வந்து நின்றது. உஸ்மான் பின்பக்கக் கதவைத் திறந்து– இருவரையும் பார்த்துப் புன்னகைக்க உள்ளே போனார்கள். பாபுராவ், வேனை நகர்த்தினான்.

"கேப்டன்" – உஸ்மான் தன் பான் கறை பற்களோடு சென்னைப் பார்த்தான். "திட்டம் கச்சிதமா முடிஞ்சிருக்கு. ரேடியோவும், டி.வி.யும் இந்தச் சம்பவத்தைப் பத்திப் பெரிசாப் புலம்பிகிட்டு இருக்காங்க. அம்பரிஷையும், சங்கர்தத்தையும் கடத்தல்காரர்களா சித்தரித்திருப்பதைப் பார்க்கும்போது மனசுக்குக் கொஞ்சம் கஷ்டமா இருந்தது."

பாபுராவ் குறுக்கிட்டுச் சொன்னான்.

"உங்க ரெண்டு பேரையும், வீர புருஷர்களாகவே... மாத்திட்டாங்க. உங்க பேரும், போட்டோவும் நாளைக்கு செய்தியில் அமர்க்களப்படும்..."

"உங்க மேலிடத்தில் இந்த வெற்றியைப் பற்றி என்ன சொன்னாங்க...?"

"தரையில் நிலைகொள்ளாமே இருக்கார்..."

"இந்தத் திட்டத்தை கஷ்டப்பட்டு முடிச்சிருக்கோம்... மேற்கொண்டு ஏதாவது பணம் தருவாரா...?"

"நிச்சயமாகத் தருவார்..."

வேன் வேகம் பிடித்து டெல்லி தெருக்களில் ஓடி, பதினைந்து நிமிட நேரத்திற்கு பின் ஆக்ரா நெடுஞ்சாலையில் இருந்த மரங்கள் அடர்ந்த அந்தப் பங்களாவில் 'காம்பவுண்டு கேட்'டுக்குள் நுழைந்தது.

சென்னும், துவாரகேஷும்– பங்களாவைப் பார்ப்பதில் ஆர்வம் காட்டாதவர்களைப் போல்– முகபாவங்களை வைத்துக்கொண்டார்கள். முழுசாய் ஒரு நிமிட நேரத்திற்கு– வீட்டுத் தோட்டத்தைச் சுற்றி இருந்த 'கான்கிரீட்' பாதையில் ஓடி– 'போர்டிகோ'வில் போய் நின்றது.



இறங்கினார்கள்.

பழைய மோஸ்தரில் கட்டப்பட்ட பங்களா முன் பக்கம், பிரமாண்டம் காட்டியது. லேசாய் மஞ்சள் கலந்த வெளிச்சத்தில்– 'போர்டிகோ' படியேறி உள்ளே போனார்கள்.

அசர வைக்கிற 'ஹால்'.

அதன் மையத்தில் இருந்து– நேர் வகிடு எடுத்த மாதிரியான மாடிப் படிகள் இரண்டு பக்கமும் பிரிந்து போயின. படிகளைப் புறக்கணித்துவிட்டு– ஹாலின் கோடியில் இருந்த அறைக்குள் நுழைந்தார்கள்.

அறையில் யாருமில்லை.

உஸ்மான், சோபாவைக் காட்டினான்.

"உட்காருங்க..."

"உங்க மேலிடம்..."

"வருவார்... இந்நேரத்துக்கு அவர் வெளிநாட்ல இருக்கிற புள்ளிகளுக்கு பேசறது வழக்கம். பத்து நிமிஷத்துல வந்துடுவார். நீங்க ஏதாவது சாப்பிடுறீங்களா...? ஹாட்... ஆர்... கூல்...?"

"ஒண்ணும் வேண்டாம்..."

"நோ... நோ...! ஸ்காட்ச் ரெண்டு 'பெக்' அனுப்பறேன்..."

உஸ்மானும், பாபுராவும்– அறைக் கதவைச் சாத்திக்கொண்டு வெளியேற– சென், துவாரகேஷ் அறையைச் சுற்றி நோட்டமிட்டார்கள். மெதுவாய் பரஸ்பரம் உள்ளங்கைகளை கிள்ளிக்கொண்டார்கள்.

துவாரகேஷ் கிசுகிசுத்தார்.

"கேப்டன்..."

"ம்..."

"இது எந்தப் பகுதின்னு உங்களுக்கு பிடிபடுதா...?"

"ஆக்ரா நெடுஞ்சாலை..."

"அதுல எந்த இடம்...?"

"தெரியலை..."

"தீன்மூர்த்தி நகர்..."

"நிச்சயமா...?"

"வேன்ல நான் வரும்போதே மோப்பம் பிடிச்சுட்டேன். இன்னும் சரியா சொல்லப்போனா தீன்மூர்த்தி நகர் விரிவாக்கம்... சரியான ஒதுக்குப்புறம்..."

"அதுக்கு மேல பேச்சு இல்ல..."

சொல்லிக்கொண்டு இருக்கும்போதே – கதவு மறுபடியும் திறந்துகொள்ள – தலையில் வெள்ளைத் தொப்பி வைத்த பணியாள் ஒருவன் ஏந்திய வெள்ளி டிரேயில்– ஸ்காட்ச் அசையும் கண்ணாடி தம்ளர்களோடு வந்தான். டீபாயில் பரப்பிவிட்டுப் போனதும்– துவாரகேஷ் இரண்டு தம்ளர்களிலும் ஐஸ் துண்டுகளைப் போட்டு, அதை 'ஸ்டிக்'கால் கலக்கி சோடா ஊற்றினான்.

நெய் மணத்தோடு– மிளகாய்த்தூள், உப்பு தூவப்பட்ட முந்திரிப் பருப்பு முழுசு முழுசாய் பீங்கான் கிண்ணங்களில் காத்திருந்தது.

இருவரும் ஸ்காட்ச் தம்ளர்களை – மவுனமாய் காலி செய்து முடித்திருந்தபோது– உஸ்மான் வேகவேகமாய் உள்ளே வந்தான்.

"வர்றாங்க..."

இருவரும் நிமிர்ந்து உட்கார்ந்து வாசலைப் பார்க்க– அந்தப் பெண்– உள்ளே வந்தாள்.

அறைக்குள் வந்தவள், நடுத்தர வயதில் தெரிந்தாள். இரட்டை நாடி சரீரம், பாப் தலை. வெளேரென்ற உடம்பை



ஒரு பட்டுச்சேலை போர்த்தி இருக்க– கண்களில் கண்ணாடி – நடையில் பார்வையில் ஒரு திமிர்த்தனம் தெரிந்தது.

அவளைப் பார்த்ததும்– சென்னும், துவாரகேஷும் மெதுவாய் எழுந்து நின்றார்கள்.

அவள் இந்தியில் பேசினாள்.

"மன்னிக்கணும்... உங்களைக் காக்க வெச்சுட்டேன்..."

"பரவாயில்லை..."

"உட்காருங்க..."

சோபாவுக்குக் கை காட்டிவிட்டு, அவள் எதிரே இருந்த – குஷன் நாற்காலியில் சாய்ந்தாள்.

"உஸ்மான்..."

"மேடம்..."

"பாபுராவ் எங்கே...?"

"வெளியே மேடம்..."

"அவனையும் கூப்பிடு..."

உஸ்மான் போய் கூட்டி வந்தான்.

பாபுராவ் பவ்வியமாய் மரியாதை செலுத்தியதைப் பொருட்படுத்தாமல்– அவள் சென்னிடம் திரும்பினாள்.

"கேப்டன்! நீங்களும், உங்கள் சகா துவாரகேஷும் அற்புதமா திட்டத்தை செயல்படுத்தி இருக்கீங்க. சம்பவம் நடந்த நிமிஷத்தில் இருந்து இந்த நிமிஷம் வரைக்கும்... அரசாங்கம் சுவாசிக்கத் திணறிகிட்டு இருக்கு. இதைக் கச்சிதமா செஞ்சு முடிச்சதுக்காக மேலும் அஞ்சு லட்ச ரூபாய்... ரொக்கத்தை உங்க ரெண்டு பேருக்கும் தர நான் ஆசைப்படுறேன்..."

"தாங்க்யூ மேடம்..."

"உஸ்மான்..."

"மேடம்..."

"அந்த ரெண்டு பிரீப்கேஸையும் கொண்டு வா..."

உஸ்மான் அருகே இருந்த சுவர் அலமாரியை நெருங்கி கதவைத் திறந்து – இரண்டு பிரீப்கேஸ்களை எடுத்துக்கொண்டு வந்தான். அவற்றை டீபாயின் மேல் வைத்துவிட்டு தள்ளி நின்றான்.

"கேப்டன்! ஆளுக்கு ஐந்து லட்சம்... இந்த பிரீப்கேஸில் இருக்கு. நீங்க எடுத்துக்கலாம். ஆனா, இதைத் தொடறதுக்கு முந்தி உங்க ரெண்டு பேர்கிட்டேயும் நாலைஞ்சு சின்னக் கேள்விகளைக் கேட்கலாமா...?"

"என்ன கேக்கப்போறீங்க...?"

"இதுக்கு முன்னாடி உங்களுக்குக் குடுத்த இருபத்தஞ்சு லட்ச ரூபாயை என்ன பண்ணுனீங்க...?"

"வீ... வீட்ல வெச்சிருக்கோம்..."

"வீட்ல வெச்சிருக்கீங்களா...? ஆனா, நான் வேற விதமா கேள்விபட்டேனே. சரி... இப்ப இருக்கிற மந்திரிகள்ல... நீங்க யார்கூடவாவது பேசிப் பழகி இருக்கீங்களா?"

"இ... இல்ல..."

"இல்லையா...? அதையும் நான் வேற விதமா கேள்விப்பட்டேனே! சரி... செத்துப்போன எம்.பி.க்கள், பயணிகளோட உடல்களை எந்த ஆஸ்பத்திரி பிணவறைக்குக் கொண்டு போனாங்க...?"

"ஸ்ரீநகர்..."

"இல்லையே... நான் வேற விதமா கேள்விப்பட்டேனே! சரி, ஸ்ரீநகர் கொண்டு போன பிணங்களை நாளைக்கு சாயந்தரம்தான் சொந்தக்காரங்ககிட்டே குடுப்பாங்களாம். அது ஏன்...?"

சென்னும், துவாரகேஷும் கழுத்தில் வியர்வை மின்ன



ஒருத்தரையொருத்தர் பார்த்துக்கொண்டார்கள்.

பாப் தலைக்காரி சிரித்தாள்.

"நான் கேட்ட கேள்விக்கெல்லாம் உங்களுக்கு சரியான பதில் தெரியும். இருந்தாலும் தெரியாத மாதிரி நடிக்கிறீங்க...! பாபுராவ்!"

"மேடம்..."

"என்னோட முதல் கேள்விக்கு நீ சரியான பதில் சொல்லு..."

பாபுராவ் ஓரடி முன்னால் வந்து நின்றான்.

"நீங்க கொடுத்த இருபத்தஞ்சு லட்சு ரூபாயை... கேப்டனும், துவாரகேஷும் ரகசியமா அரசாங்கத்துல ஒப்படைச்சுட்டாங்க மேடம்..."

"உஸ்மான்..."

"மேடம்..."

"நீ இரண்டாவது கேள்விக்கு சரியான பதிலைச் சொல்லு."

உஸ்மான் நேர் பார்வை பார்த்துக்கொண்டு சொன்னான்.

"இப்ப இருக்கிற மந்திரிகளில்... ஒருத்தரை இவர்களுக்கு நல்லாவே தெரியும் மேடம்..."

பாப்தலை கால் மேல் கால் போட்டுக்கொண்டு சென்னிடம் திரும்பினாள்.

"மூணாவது கேள்விக்கு நான் சரியான பதிலைச் சொல்லட்டுமா கேப்டன்...? எம்.பி.க்கள், பயணிகளோட பிணங்களை அவங்களோட உறவினர்கிட்ட நாளைக்கு மாத்திரமல்ல, என்னிக்குமே ஆஸ்பத்திரி நிர்வாகம் குடுக்க முடியாது. ஏன்னா... அவங்க செத்திருந்தாத்தானே பிணங்கள் அங்கே போயிருக்கும்?"

சென்னும், துவாரகேஷும் மெதுவாய்– நடுக்கமாய் எழுந்து நின்றார்கள்.

"என்ன எந்திரிச்சுட்டீங்க...? உங்க துரோகம் இவ்வளவு சீக்கிரம் சாயம் போகும்னு நினைச்சே பார்த்திருக்க மாட்டீங்க இல்லையா? எப்பவும் நாங்க எதிராளிகளை முழுசா நம்பறதில்லை... நீங்க, வஹிதா– இந்த மூணு பேருமே திட்டத்துக்கு 'பார்ட்னர்ஸ்'. ஆனா, உங்க ரெண்டு பேருக்கும் தெரியாமே... மூணாவது 'பார்ட்னரை' நாங்க பெரிய தொகைக்கு மடக்கிட்டோம். அந்த 'பார்ட்னரை' சொல்லட்டுமா...?"

சொன்ன பாப் தலைக்காரி – இண்டர்காம் ரிஸீவரை எடுத்து ஒரு பட்டனைத் தட்டிவிட்டு– மெல்லிய குரலில் சொன்னாள்.

"அறைக்கு வந்துட்டுப் போம்மா."

வஹிதா வந்தாள்.

## 15

சென், துவாரகேஷ் இரண்டு பேர்களுக்கும் வஹிதாவின் பெயர் அதிர்ச்சியாய் இருந்தது.

"வ...ஹி...தா..."

அவள் பெரிதாய் புன்னகைத்தாள்.

"கேப்டனுக்கும், உதவி காப்டனுக்கும் என் ராத்திரி நேர வணக்கம். இது மாதிரியான சந்திப்பை நீங்க எதிர்பார்த்திருக்க மாட்டீங்க. மேடம்! வந்திருக்கிற விருந்தினர்களுக்கு ஏதாவது சாப்பிடக் குடுத்தீங்களா...?"



"ம்... ஸ்காட்ச் குடிச்சிருக்காங்க..."

சென் அவளை ஏறிட்டார்.

"வ... வஹிதா... நீ... நீ...?"

"கட்சி மாறுகிற உரிமை... அரசியல்வாதிகளுக்கு மட்டும் தான் இருக்கா கேப்டன்? நான் மாறக்கூடாதா...?"

சென் ஏதோ கோபமாய் பேச முயல– வஹிதா கையமர்த்தினாள்.

"ஸாரி கேப்டன்! இருபத்தஞ்சு லட்ச ரூபாய் குடுத்தவங்களை நீங்க ஏமாத்தப் பார்த்திங்க. நான் உங்களை ஏமாத்திட்டேன். வீ... ஆர்... இன்... த... சேம் போட்..."

"வஹிதா! இது தேசத் துரோகமில்லையா...?"

"துரோகமா...? துரோகம் யார் பண்ணலை...? அஞ்சு வருஷத்துக்கு ஒரு தடவை ஓட்டுப் போடுகிற சாதாரண குடிமகன்கிட்டே இருந்து இந்தத் துரோகம் ஆரம்பமாகுது. பணத்தை வாங்கிட்டுத்தானே அவன் ஓட்டுப் போடறான்...? மந்திரிங்க தேசப் பணத்தைக் கொள்ளையடிக்கிறது... துரோகமில்லையா...?"

பாப் தலைக்காரி எழுந்தாள்.

"கேப்டன்! நீங்க உங்க தேசத்துக்கு விசுவாசமா நடந்துகிட்டாலும், எனக்குத் துரோகம் பண்ணிட்டீங்க. அந்தத் துரோகத்துக்கு தண்டனையைக் குடுத்துத்தானே ஆகணும்? நான் தண்டனை தர்ற முறையே... கொஞ்சம், வித்தியாசமாதான் இருக்கும். உங்க ரெண்டு பேரோட உயிரையும் பறிக்கப் போறது– என்கிட்ட இருக்கிற துப்பாக்கியோ... கத்தியோ... விஷமோ இல்லை... பசிங்கிற ஆயுதம்தான் உங்களைக் கொல்லப் போகுது. ஒரு மனுஷன் உச்சபட்சமா... தண்ணி, சாப்பாடு இல்லாம...

பதினொரு நாள் இருக்க முடியுமாம். அதுக்கப்புறம் உடம்பில் இருக்கிற 'செல்'களெல்லாம் காகிதம் போல் உலர்ந்து சாக வேண்டியதுதானாம். நீங்களும் அப்படித்தான் சாகப்போறீங்க...? உங்களுக்கு பசி, தாகம் எடுக்கும் போதெல்லாம்... எனக்கு நீங்க பண்ணின துரோகம் ஞாபகத்துக்கு வந்து உங்களைத் தகிக்க வைக்கணுங்கிறதுதான் என்னோட ஆசை. உஸ்மான்...! பாபுராவ்...!"

"எஸ்... மேடம்."

மறுகணம்...

இரண்டு பேர்களின் கைகளையும், பின்னுக்குக் கட்டி- தள்ளிக்கொண்டு போனார்கள்... பாபுராவும், உஸ்மானும்.

பாப்தலை, வஹிதாவிடம் திரும்பினாள்.

"வஹிதா! நீ உன்னோட குவார்ட்டர்ஸுக்குப் போயிடு. நாளைக்குக் காலையில் இருந்து போலீஸ் உன்கிட்டே சென், துவாரகேஷ் காணாம பேர்ன விஷயம் குறித்து விசாரணைக்கு வருவாங்க. வர்றவங்களைச் சமாளிக்கிறது உன்னோட பொறுப்பு.

"எஸ்... மேடம்..."

"ரெண்டு மாசத்துக்கு 'ஏர்ஹோஸ்டஸ்' வேலையைப் பார்த்துக்கிட்டிரு. அப்புறம் ராஜினாமா பண்ணிட்டு, என்கிட்ட வேலைக்கு வந்துடு. உன்னோட வாழ்நாள் பூராவும் லட்சங்களிலேயே புரளலாம்..."

உடம்பு பூராவும் சந்தோஷத்தைச் சுமந்துகொண்டாள் வஹிதா.

நள்ளிரவு ஒரு மணி.

ஷாமினியின் வீடு.





வாசலில் போலீஸ் ஜீப் நின்றிருக்க – வீட்டுக்குள்ளே எல்லா பல்புகளும் ஒளிர்ந்துகொண்டிருந்தன. பூட்ஸ் சத்தங்கள்... பேச்சுக் குரல்கள்.

இன்ஸ்பெக்டர் ஆனந்த், சப்– இன்ஸ்பெக்டர் ஜாதவ், ஷாமினியிடம் விசாரித்துக்கொண்டு இருந்தார்கள்.

"உங்க கணவர்... எத்தனை மணிக்கு வெளியே போனதாகச் சொன்னீங்க...?"

"எட்டு மணி..."

"யார் வந்து கூட்டிட்டுப் போனாங்க...?"

"கேப்டன் சென்..."

"எங்கே போறதா சொல்லிட்டுப் போனாங்க...?"

மெல்லிய குரலில் விவரம் பூராவையும் சொன்னாள்.

செவிமடுத்துவிட்டு இன்ஸ்பெக்டர் கேட்டார்.

"அவங்கப் பார்க்கப் போன ஆட்களோட பேர் என்னான்னு சொன்னீங்க...?"

"பாபுராவ், உஸ்மான்."

"அவங்களை நீங்க பார்த்திருக்கீங்களா...?"

"இல்லை..."

"உங்க தகவல்படி... பைலட் சென்னுக்கும், உங்க கணவருக்கும் அந்த ஆட்களால் ஏதாவது ஆபத்து ஏற்பட்டிருந்தா... 'ஏர்ஹோஸ்டஸ்' வஹிதாவுக்கும் அதே ஆபத்து ஏற்பட்டிருக்கணும். இல்லையா...?"

"ஆமா..."

"வஹிதாவுக்குப் போன் பண்ணிப் பார்த்தீங்களா...?"

"அவளுக்குப் போன் இல்லை..."



"வீடு எங்கே...?"

"ஏர்மென் குவார்ட்டர்ஸ்... பி– 12..."

இன்ஸ்பெக்டர் ஆனந்தும், சப்– இன்ஸ்பெக்டர் ஜாதவும் புறப்பட்டார்கள்.

அந்தக் குடியிருப்பின் – இருட்டான சாலைகளில் ஓடி, குறிப்பிட்ட வீட்டுக்கு முன்னால் ஜீப்பை நிறுத்திக்கொண்டு கீழே இறங்கினார்கள்.

படியேறி அழைப்புமணிக்கு வேலை கொடுக்க– வஹிதா 'நைட் கவுனில்' வந்து கதவைத் திறந்தாள்.

போலீஸ் சீருடைகளைப் பார்த்ததும்– விஷயத்தைப் புரிந்துகொண்டாலும், புரியாத மாதிரி முகத்தை வைத்துக்கொண்டு –

"எஸ்..." என்றாள்.

"நீங்க வஹிதா...?"

"ஆமா..."

"பைலட் சென், 'கோ பைலட்' துவாரகேஷ்... இங்கே வந்தாங்களா...?"

"வரலையே...!"

"ராத்திரி எட்டு மணிக்குப் போன அவங்க ரெண்டு பேரும் இதுவரைக்கும் வீடு திரும்பலை..."

"அப்படியா...?" போலியாய் கலவரப்பட்டாள் வஹிதா.

"நீங்க எத்தனை மணிக்கு அவங்க ரெண்டு பேரையும் பார்த்தீங்க...?"

"ஸ்ரீநகரில் இருந்து நாங்க மூணு பேரும் விமானத்துல மத்தியானம் மூணு மணிக்கு மேல்தான் டெல்லிக்கு வந்தோம். நான் ஏர்போர்ட்டில் இருந்து நேரா... குவார்ட்ர்ஸுக்கு வந்துட்டேன். அதுக்கப்புறம் அவங்களை பார்க்கலை..."

"உஸ்மான், பாபுராவ்... இவங்க எங்கே இருக்காங்கன்னு உங்களுக்கு தெரியுமா...?"

"இந்தப் பெயர்களை உங்களுக்கு யார் சொன்னது?"

"துவாரகேஷ் மனைவி..."

"ஸார், இதில் ஒரு அரசாங்க ரகசியம் சம்பந்தப்பட்டிருக்கிறது..."

"தெரியும்... விமானக் கடத்தல் நாடகம்தானே?"

"ஆமாம்..."

"மிஸஸ் துவாரகேஷ் எல்லா விஷங்களையும் சொல்லிட்டாங்க... அந்த எதிரிகளால் உங்களுக்கும் ஆபத்து வரலாம்..."

வஹிதா போலி பயத்தோடு கண்களை விரித்தாள்.

"நீங்க சொல்றதைப் பார்த்தா... விமானக் கடத்தல் நாடகம் எதிரிகளுக்குத் தெரிஞ்சு– அந்தக் கோபத்தால் அவங்க சென்னையும், துவாரகேஷையும்... மடக்கி இருப்பாங்கன்னு சொல்ல வர்றீங்களா ஸார்..."

"ஆமாம்..."

"பாபுராவ்– உஸ்மான்... இவங்களை நான் ஒரேயொரு தடவைதான் பார்த்திருக்கேன். அவங்க இந்த டெல்லியில் எங்கே இருக்காங்கன்னு எனக்குத் தெரியாது..."

"உங்களுடைய விமானக் கடத்தல் நாடகம்... வேறு யாருக்காவது தெரியுமா...?"

"தெரியாது..."

"இந்த வீட்டில் யார்– யார் இருக்கிறார்கள்?"

"நான் மட்டும்தான்..."

"நிலைமை விபரீதமாய் இருக்கும்போது– நீங்கள் இந்த வீட்டில் தனியாய் இருப்பது சரியில்லை... எதிரிகளைக் கண்டுபிடிக்கும் வரை ஏர்போர்ட்டிலோ அல்லது



தெரிஞ்சவங்க வீட்டிலோ தங்கிக்கொள்வது உசிதம்."

வஹிதா கண்களில் மட்டும் பயத்தைக் காட்டி– தலையை ஆட்டினாள்.

"நான் இப்போதே ரெடி... என்னை ஏர்போர்ட்டில் கொண்டுபோய் விட்டுவிடுங்கள். சென்னுக்கும், துவாரகேஷுக்கும் வந்த ஆபத்து என்னையும் தொடர்ந்து வரும். ஏனென்றால், நாங்கள் மூன்று பேரும் சம்பந்தப்பட்ட விவகாரம் இது..."

வஹிதா, சூட்கேஸில் சில சேலைகளைத் திணித்துக்கொண்டு– வீட்டைப் பூட்டிவிட்டு அவர்களோடு புறப்பட்டாள்.

ஜீப், ஏர்போர்ட்டை நோக்கிப் போயிற்று.

இன்ஸ்பெக்டர் ஆனந்த் கேட்டார்.

"பாபுராவ்... உஸ்மான் இந்த இரண்டு பேரையுமே ஒரு தடவை பார்த்ததாகச் சொன்னீங்க இல்லையா...?"

"ஆமா..."

"அவர்கள் எப்படி இருந்தார்கள்? குறிப்பாக ஏதாவது அடையாளம் சொல்ல முடியுமா...?"

வஹிதா யோசித்துவிட்டுச் சொன்னாள். நேர் மாறான அடையாளங்கள்.

"ரெண்டு பேருமே உயரம் குறைவாக இருந்தார்கள். ஒருவனுக்கு மாறு கண். இன்னொருவன் தலை வழுக்கையாக இருந்தது."

"என்ன மொழி பேசினார்கள்...?"

"இந்தி..."

"இந்த இரண்டு பேர்களிடமும் நீங்கள் பார்த்தபோது ஏதாவது அடையாளம்?"

வஹிதா யோசிப்பவளைப் போல் கண்களை மூடி – பின்

திறந்து ஒரு அழகான பொய்யைச் சொன்னாள்.

"ரெண்டு பேர்ல ஒருத்தன் விந்தி விந்தி நடந்தான் ஸார்."

டெல்லி உள்துறை அமைச்சகம். காலை ஏழு மணி. கட்டடத்தின் உள் மடிப்பில் கண்ணாடிச் சுவர்கள் சூழ்ந்த அறைக்குள்– அரசாங்க உயர் அதிகாரிகளும், உயர் போலீசாரும், கவலையான அமைச்சரைச் சுற்றி அரை வட்டமாய் உட்கார்ந்திருந்தார்கள். அமைச்சர் உடைந்த குரலில் பேசிக்கொண்டிருந்தார்.

"திட்டம் வெற்றிகரமாய் முடிந்துவிட்டது என்கிற நினைப்பில் இருந்த நமக்கு... பைலட் சென்னும், கோ–பைலட் துவாரகேஷும் நேற்று இரவு எட்டு மணி முதல் காணாமல் போயிருப்பது கவலையைத் தருகிறது. விரோதிகளின் முகாமில் சிக்கி இருப்பார்கள் என்று நினைக்கத் தோன்றுகிறது. அவர்களை எப்பாடுபட்டாவது காப்பாற்றியாக வேண்டும். வஹிதாவுக்குப் பாதுகாப்பு ஏற்பாடுகளை அதிகரிக்க வேண்டும்..."

டெல்லி டி.ஜி.பி. தன் மூக்குக் கண்ணாடியைக் கழற்றி கையில் வைத்துக்கொண்டு அமைச்சரை ஏறிட்டார்.

"உஸ்மானும், பாபுராவும்... இந்த இரண்டு பேர்களையும் சந்தித்து– அவர்கள் மூலமாக மேலிட மூலவர் யார் என்பதைக் கண்டுபிடிக்கத்தான் பைலட்டும், கோ– பைலட்டும் போய் இருக்கிறார்கள். போன இடத்தில் உண்மை வெளிப்பட்டு, அவர்கள் ஆபத்தில் மாட்டியிருக்க வேண்டும் என்பது என் கருத்து..."

"பாபுராவ், உஸ்மான் பற்றிய தகவல்கள் நம்மிடையே ஏதும் இல்லாததால்... சென், துவாரகேஷை மீட்க எந்தத் திசையை நோக்கி நகர்வது என்கிற திகைப்பு ஏற்பட்டுள்ளது.



நாம் முன்னமே ஒரு காரியம் செய்திருக்க வேண்டும்..."

"என்ன...?"

"எதிரிகளை சந்திக்கப் போன இருவரையும் ரகசியமாகத் தொடர்ந்து சென்றிருக்க வேண்டும். அப்படித் தொடர்ந்து சென்றிருந்தால்... இருப்பிடம் தெரிந்திருக்கும்..."

"இந்த யோசனையை நான் ஏற்கெனவே பைலட்டிடம் சொன்னேன். ஆனால், அவர் ஒப்புக் கொள்ளவில்லை. 'எதிரிகள் எங்களைப் பூர்ணமாக நம்ப வேண்டுமென்றால் – அவர்களை போலீஸ் கண்காணிப்பதோ, தொடர்வதோ கூடாது. போலீஸ் நிழல் அவர்களுக்குத் தெரிந்தால், எங்களை வீணாக சந்தேகப்படுவார்கள். எதிரிகளின் மூலவரைக் கண்டுபிடிக்கும் வரையில்... நாங்கள் எப்போதும் போல் நடந்துகொள்ள அனுமதி தர வேண்டும்' என்றார். அவர் கோரிக்கையில் நியாயம் இருந்ததால் – நாங்களும் அனுமதி கொடுத்துவிட்டோம்."

"பாபுராவ், உஸ்மான்... இந்தப் பெயர்களைத் தவிர வேறு எதுவுமே தெரியாத நிலையில் – பைலட்டையும் , கோ–பைலட்டையும் எப்படிக் காப்பாற்றப் போகிறோம்...?"

"வஹிதா கொடுத்த அடையாளங்களை வைத்து பழைய குற்றவாளிகள் பட்டியலில் தேடிப் பார்த்தீர்களா...?"

"பார்த்தோம் ஸார்... அந்த அடையாளங்களில் எந்த நபருமே இல்லை. இது விஷயமாய் பம்பாய், கல்கத்தா, சென்னை போலீஸுக்கும் அடையாளங்களை அனுப்பியுள்ளோம். மாறுகண், விந்திய நடை, சற்று வித்தியாசமான அடையாளங்கள். அவர்கள் பழைய குற்றவாளிகளாய் இருந்தால் நிச்சயம் கண்டுபிடித்துவிடலாம்..."

அமைச்சருக்குப் பக்கத்தில் இருந்த 'இண்டர்காம்' கிணுகிணுத்தது. பக்கத்தில் நின்றிருந்த உதவியாளர் எடுத்து

செவிமடுத்துவிட்டுச் சொன்னார்.

"இந்த ஆலோசனை கூட்டத்திற்கு அழைக்கப்பட்டிருந்த வஹிதா வரவேற்பறையில் காத்திருக்கிறார்..."

"வரச் சொல்லுங்கள்..."

உதவியாளர் ரிஸீவரில் வஹிதாவுக்கு வரும்படி அழைப்புக் கொடுக்க – அடுத்த இரண்டாவது நிமிடம் அவள் உள்ளே வந்தாள்.

மிக எளிமையான ஒரு சேலையில் இருந்தாள். கண்களில் மை இல்லை. உதட்டில் 'லிப்ஸ்டிக்' தீற்றல் கிடையாது. செயற்கைக் கவலையோடு– எல்லோரையும் பார்த்து– வணக்கம் சொன்னாள்.

அமைச்சர், காலியாய் இருந்த ஒரு இருக்கையைக் காட்டினார்.

"உட்காருங்க மிஸ் வஹிதா..."

உட்கார்ந்தாள்.

டி.ஜி.பி. அவளிடம் திரும்பினார்.

"சென், துவாரகேஷ் இருவரும் காணாமல் போய் பதினோரு மணி நேரம் ஆகிறது. உயிருக்கு எந்த விதமான ஆபத்தும் ஏற்பட்டுவிடுவதற்கு முன்பாக அவர்களை நாம் காப்பாற்றியாக வேண்டும். பாபுராவ், உஸ்மானை நீங்கள் மூன்று பேர் மட்டும்தான் பார்த்திருக்கிறீர்கள்.

இப்போது நீங்கள் மட்டுமே இந்த வழக்கில் உதவ முடியும். பாபுராவ், உஸ்மான் இவர்களைப் பற்றி நீங்கள்தான் சொல்ல வேண்டும். அவர்களுடைய அங்க அடையாளங்களைப் பற்றி சொல்லிவிட்டீர்கள். ஆனால், அது மட்டும் போதாது..."

வஹிதா நிமிர்ந்தாள்.

"எனக்குத் தெரிந்த தகவல்களை நான் ஏற்கெனவே சொல்லிவிட்டேன். அந்த இரண்டு பேர்களையும் ஒரேயொரு



தடவைதான் பார்த்தேன். அதிகம் பேசவில்லை..."

"நீங்கள் அவர்களைப் பார்த்த அன்றைக்கு அவர்கள் ஏதாவது வாகனத்தில் வந்திருந்தார்களா...?"

"ஆமா...!"

"என்ன வாகனம்...?"

"வேன்..."

"என்ன ரகம்...?"

"நான் கவனிக்கவில்லை..."

"வேனின் நிறம்...? நம்பர்..."

"கவனித்தேன்! ஆனால், இப்போது ஞாபகமில்லை..."

வஹிதா அப்பாவித்தனமாய்– பிடிகொடுக்காமல் பேசிக்கொண்டே போனாள்.

அமைச்சர் தன் பெரிய மூக்கைக் கவலையுடன் இடது கை விரல்களால் உருவினார்.

இருட்டறைக்குள் தள்ளப்பட்ட சென்னும், துவாரகேஷும் முதல் ஒரு மணி நேரம் பீதியில் உறைந்து போய் இருந்தார்கள். பின் சுதாரித்துக்கொண்டு – தப்புவதற்கு ஏதாவது மார்க்கம் இருக்கிறதா என்று தேட ஆரம்பித்தார்கள்.

பின்புறம் கயிற்றால் கட்டப்பட்டிருந்த சென்னின் கைகளை துவாரகேஷ் பற்களால் கடித்து விடுவிக்க – அவர் துவாரகேஷின் கயிற்றுக் கட்டுகளை அவிழ்த்தார்.

எட்டுக்கு எட்டு என்கிற பரப்பளவில் இருந்த அறையில் ஒரு சிறிய 'வெண்டிலேட்டர்' மட்டும் – உச்சியில் தெரிந்தது. காற்றும், வெளிச்சமும் போனால் போகிறதென்று... அதற்குள் வந்தன.

"துவாரகேஷ்..."

"ஸார்..."

"வெண்டிலேட்டருக்குப் பின்னாடி... என்ன இருக்குன்னு பார்க்க முடியுமா...?"

"நான் சுவரோரமா குனிஞ்சுக்கறேன்... நீங்க மேல ஏறிப் பாருங்க... ஸார்."

துவாரகேஷ் குனிந்துகொள்ள – சென் அவர் முதுகின் மேல் ஏறி மறுபக்கம் எட்டிப் பார்த்தார்.

பங்களாவின் பின்பகுதி தோட்டம் தெரிந்தது. தோட்டத்தில் ஒரு அல்சேஷன் நாய், கன்றுக்குட்டி அளவில் – மிதப்பாய் திரிந்துகொண்டிருந்தது.

சென் கீழே இறங்கினார்.

"என்ன ஸார்...?"

"ஏதாவது அதிசயம் நிகழ்ந்தால் தவிர, இங்கிருந்து தப்ப வழியே இல்லை. எதிரியின் பலத்தை நாம் சுலபமாய் கணக்கிட்டுவிட்டோம்..."

"எதிரியின் பலம் தெரிந்துதான் இருந்தது ஸார். வஹிதாவை நம்பி ஏமாந்துவிட்டோம். அவள் வளர்ந்த சூழ்நிலை... தேசத்துக்குத் துரோகம் பண்ணும்படியா தூண்டி இருக்கு..."

"யார்... இந்த பாப் தலைக்காரி...? நம்ம தேசத்து மேலே இவளுக்கென்ன கோபம்...?"

இருவரும் பேசிக்கொண்டே சுவருக்குப் பக்கம் பக்கமாய் சாய்ந்து கண் மூடினார்கள். தைரியமாய் இருக்க முயன்றாலும், உள்ளுக்குள் இதயம் பயத்தில் உதறியது.

'காலையில் இருந்து வயிறு பசிக்க ஆரம்பிக்கும்.'

'காய்ந்து போன தொண்டை தண்ணீர் கேட்கும். மத்தியானம் அதிகமாய் பசிக்கும்... தண்ணீருக்காக நாக்கு தவிக்கும்.'

'உடம்பின் ஒவ்வொரு 'செல்'லும்... தண்ணீர்ப் பசையை



இழந்து காகிதமாய் உலர்ந்து – கொஞ்ச கொஞ்சமாய் மரணத்தை நோக்கி...'

வெளியே சுவர்க்கோழிகள் இரைந்துகொண்டிருந்தன.

## 16

அமைச்சரின் ஆலோசனைக் கூட்டத்தை முடித்துக்கொண்டு, விமான நிலையத்தில் இருந்து தன் ஓய்வு அறைக்குத் திரும்பினாள் வஹிதா. குளிக்க வேண்டும் என்று நினைத்து சேலையை உருவியவள், டெலிபோன் அலறும் சத்தம் கேட்டு– ரிசீவரை எடுத்தாள்.

விமான நிலைய 'டெலிபோன் ஆபரேட்டர்' பேசினாள்.

"வஹிதா..."

"என்ன சுஷ்மா...?"

"அரை மணி நேரத்துக்கு முந்தி உனக்கொரு போன் வந்தது."

"எனக்கா... யார் பேசினாங்க...?"

"ஷீலாராணின்னு உன்னோட தோழி. ஏதோ முக்கியமான விஷயமாம்... ஒரு உயிரைக் காப்பாத்தறதுக்காக ரத்தம் வேணுமாம். நீ வெளியே போயிட்டு வந்ததும், உடனே போன் பண்ணச் சொன்னா...?"

"பேரென்ன... ஷீலாராணியா...?"

"ஆமா..."

"அப்படி எனக்கு யாரையும் தெரியாதே...?"

"போன் நம்பர் குடுத்துருக்கா. அந்த நம்பருக்குப் பேசிப் பாரு..."

"கண்டிப்பா இது 'ராங் நம்பர்'தான்..."

"எனக்கு அப்படித் தெரியலை வஹிதா. உன்னை ரொம்பவும் தெரிஞ்ச மாதிரிதான் பேசினா..."

"போன் நம்பர் என்ன...?"

சொன்னாள்.

"சரி... நான் போன் பண்ணிப் பார்க்கிறேன்..."

நம்பரை ஒரு துண்டுக் காகிதத்தில் குறித்துக்கொண்டு-ரிஸீவரை சாத்தினாள்.

'யார் அந்த ஷீலாராணி? இந்தப் பெயரில் எனக்கு எவளுமே தோழி இல்லையே...?'

'போன் பண்ணிப் பாரு...'

மூளைக்குள் யோசனை பரபரவென்று குழி பறித்தது. ரிஸீவரை எடுத்துக்கொண்டு டயலைச் சுழற்றினாள். நான்கு முறை 'ரிங்' போனதும்... 'ரிசீவர்' எடுக்கப்பட்டது.

ஒரு பெண் குரல் "ஹலோ" என்றது.

"ஷீலாராணி...?"

"ஆமா..."

"நான் 'ஏர்ஹோஸ்டஸ்' வஹிதா."

"ஓ... வஹிதா! வெளியே போயிட்டு இப்பத்தான் வந்தியா?"

"நீ... நீ யாருன்னு தெரியலையே?"

"என்னை உனக்குத் தெரியாம இருக்கலாம். ஆனா ,எனக்கு உன்னை நல்லாத் தெரியும். அதுவும் உஸ்மான் மூலமா..."

திடுக்கிட்டாள் வஹிதா.



"உஸ்மானை உனக்குத் தெரியுமா?"

"நல்லாவே தெரியும். அவன் ஒரு அயோக்கிய ராஸ்கல். அவனோட பாக்கெட் நோட்டுல உன்னோட பேரும், டெலிபோன் நம்பரும் இருந்தது. அதான் போன் பண்ணினேன். அவனுக்கும், உனக்கும் என்ன பழக்கம்னு எனக்குத் தெரியாது.

என்னைக் காதலிக்கிறதா சொல்லி சீரழிச்சான். அதே மாதிரி நீயும் அவனைக் காதலிக்கிறதா இருந்தா... இப்பவே கழண்டுக்க. எனக்கு நீ உடனே போன் பண்ணணுங்கிறதுக்காக... ரத்தம் சம்பந்தமா ஒரு முக்கியமான விஷயம்னு விமான நிலைய டெலிபோன் ஆபரேட்டர்கிட்டே பொய் சொன்னேன்."

"உன்னோட ஆலோசனைக்கு நன்றி..."

ரிசீவரை வைத்துவிட்டு நெற்றியில் துளிர்த்திருந்த வியர்வையைக் கைக்குட்டையால் ஒற்றிக்கொண்டாள் வஹிதா.

## 17

"ரெஜிதா! நல்லா இருக்கியா?"– காரில் இருந்து இறங்கிய குள்ளமான சீனாக்காரன், முகத்தில் பூனை மீசையோடு சிரித்தான்.

பாப் தலைக்காரி 'போர்ட்டிகோ' படிகளில் இறங்கி, அவனுடைய கையைப் பற்றிக்கொண்டாள்.

"வாருங்கள்... சூ ஸென். பயணம் நன்றாக இருந்ததா?"

"ம்..."

"மாத்திரைச் சாப்பிடும் பழக்கத்தை நிறுத்திவிடுங்கள் சூ ஸென். இல்லாவிட்டால் இன்னமும் குள்ளமாகிவிடுவீர்கள்."

சூஸென் தன் பற்கள் தெரிய சிரித்து, ரெஜிதாவின் வெள்ளை வெளேரென்ற சதையைக் கிள்ளினான்.

"இதெல்லாம் தனி அறைக்குப் போய்."

"இன்றைக்கு ராத்திரி நான் இங்கேதான் தங்கல்."

"சந்தோஷம்."

ஹாலைக் கடந்து உள்ளே போய் அறைக்குள் அமர்ந்தார்கள். கதவு சாத்திக்கொண்டது.

இருவரும் சோபாவில் பக்கம் பக்கமாய் உட்கார்ந்தார்கள்.

சூ ஸென் கேட்டான். "நம்மை ஏமாற்றி முட்டாளாக்க நினைத்த பைலட்டும், உதவி பைலட்டும் எப்படி இருக்கிறார்கள்?"

"ரகசிய அறையில் வெறும் காற்றை சுவாசித்துக்கொண்டு சவுக்கியமாய் இருக்கிறார்கள்."

"உள்ளே அடைபட்டு எவ்வளவு நேரமாகிறது?"

"பதினான்கு மணி நேரம்."

"இந்நேரம் பசியும், தாகமும் அவர்களுடைய உடம்பைப் பிறாண்ட ஆரம்பித்திருக்கும்."

"சூ ஸென்! இந்த எம்.பி.க்களைக் கொல்லும் திட்டம் இப்போது தோற்றாலும்... என் கைவசம் வேறொரு யோசனை இருக்கிறது. அதைக் கூடிய சீக்கிரமே நடைமுறைக்குக் கொண்டு வரப்போறேன்."

"எது வேண்டுமானாலும் செய் ரெஜிதா.... இங்கே அமைதி என்கிற வார்த்தையே இருக்கக்கூடாது. மக்கள் சந்தோஷமாய் வாழக்கூடாது. எந்த ஆட்சி வந்தாலும் நிலைக்கக் கூடாது. நாட்டில் கலவரங்கள் உருவாகி, ஒருவரையொருவர் அடித்து மாய்ந்துகொண்டால்தான்... அண்டை நாடான எங்களுக்குக் கொண்டாட்டம். நினைத்த நேரத்தில் போர் தொடுக்கலாம். உங்கள் எதிரி நாடான பாகிஸ்தானிலும், தைரியமாய் ராணுவ ஆக்கிரமிப்பை ஆரம்பிக்கலாம்."

"சூ ஸென்! இந்த நாடு உலக அரங்கில் அவமானப்பட வேண்டும் என்பதுதான் என் ஆசை. என் கணவர்... இந்த நாட்டின் மந்திரி சபையில் மூன்று ஆண்டு வெளியுறவுத்துறை மந்திரியாக இருந்தார். அவர் ராணுவ ரகசியங்களை வெளிநாட்டுக்குக் கடத்தினார் என்ற குற்றச்சாட்டை சுமத்தி, ராணுவ கோர்ட்டு மூலம் தண்டனை வழங்கினார்கள். ஒரு வருஷம் சிறையில் இருந்து அவர் மாரடைப்பால் காலமானார். அந்த நிமிஷத்தில் இருந்து என் இதயமும், நெருப்புக் குழம்பாயிற்று. என் சந்தோஷமும், அமைதியும் எப்போது காணாமல் போயிற்றோ அப்போது இருந்து இந்தத் தேசத்தை..."

சூ ஸென் கையமர்த்தினார்.

"எத்தனை தடவைதான் இதையே சொல்வாய் ரெஜிதா? உன்னுடைய ஆத்திரமும், எங்கள் நாட்டின் ராஜதந்திரமும் இணைந்துதானே உங்கள் நாட்டையே நாசப்படுத்தப் போகின்றன. வரும் அக்டோபருக்குள் மூன்று முக்கியமான சதித் திட்டங்கள் இங்கே நிகழ்த்தி முடிக்க வேண்டும். அதற்கான திட்டத் தயாரிப்புகளோடு வந்துள்ளேன்."

"சூ ஸென்."

"ம்..."

"பணம் தேவைப்படுகிறது."

"இந்தியமதிப்பில் எவ்வளவு வேண்டும்?"

“ஐந்து கோடி.”

“இந்த மாத இறுதிக்குள் ஏற்பாடு செய்தால் போதுமா?”

“போதும்...”

“மான்சிங்கு, சாம்பாவும் எங்கே...? கண்ணில் படவே இல்லையே!”

ரெஜிதா சிரித்தாள்.

“டெல்லியில் இத்தனை நாட்களாய் உஸ்மான், பாபுராவாக பெயர் மாற்றத்தோடு இருந்தார்கள். இப்போது முகங்களை மாற்றிக்கொண்டு நம் அசாம் கிளைக்குப் போய் இருக்கிறார்கள். அங்கிருந்து பாதல், ராம்ஜி என்னுடைய உதவியாட்களாக வந்திருக்கிறார்கள்.”

“திறமையான ஆட்கள்.”

சூ ஸென் தன் பூனை மீசைக்குக் கீழே சிரித்துக்கொண்டு இருக்கும்போதே, அருகே இருந்த டெலிபோன் கிணுகிணுத்தது.

ரெஜிதா எடுத்தாள்.

“ஹலோ...”

“மேடம்! நான் வஹிதா...”

“வஹிதாவா... என்ன விஷயம்?”

“மேடம்... பத்து நிமிஷத்துக்கு முந்தி எனக்கு ஒரு போன் வந்தது. ஷீலாராணின்னு ஒரு பொண்ணு உஸ்மானுக்குத் தெரிஞ்சவளாம்... அது.”


ரெஜிதா குறுக்கிட்டாள்.

“இப்ப நீ எங்கிருந்து பேசறே?”

“ஏர்போர்ட்ல இருக்கிற பப்ளிக் டெலிபோன் பூத்தில் இருந்து”

“என்ன விஷயம்? சுருக்கமாச் சொல்லு.”





வஹிதா, ஷீலாராணியைப் பற்றிச் சொன்னாள்.

மறுமுனையில் சில விநாடிகள் மவுனம். பின் ரெஜினா கேட்டாள்.

"உஸ்மானும், அவளும் ஒருத்தரையொருத்தர் காதலிச்சாங்களா?"

"ஆமா... அப்படித்தான் சொன்னா."

"பேரென்ன... ஷீலாராணியா?"

"ஆமா...!"

"அவ போன் நம்பர்?"

வஹிதா சொன்னாள்.

"சரி... அந்த ஷீலாராணியைப் பத்தி கவலைப்படாதே. உன்னோட வேலைகளைப் பார்த்திட்டிரு. இனிமே அவ உனக்கு போன் பண்ணமாட்டா."

"எனக்கு பயமா இருக்கு மேடம்."

"ஒரு பயமும் வேண்டாம். சந்தோஷமா ஏர்ஹோஸ்டஸ்ஸா வேலையைப் பாரு."

ரிசீவரை வைத்தாள் ரெஜிதா.

## 18

ரிஸீவரை கொக்கியில் மாட்டிவிட்டு, டெலிபோன் பூத்தின் கண்ணாடி கதவைத் திறந்துகொண்டு வெளிப்பட்ட வஹிதா– சகலமும் உறைந்து போய் அப்படியே நின்றாள்.

இன்ஸ்பெக்டர் ஆனந்தும், சப் – இன்ஸ்பெக்டர் ஜாதவும் முகத்தைத் தொங்க விட்டுக்கொண்டு பயணிகள் போல் நின்றிருந்தார்கள்.



"ஹலோ... மிஸ் வஹிதா..."

ஆனந்த் சிரித்தார்.

"ஹ... ஹ... ஹலோ..."

"ஆச்சரியமா இருக்கு. நீங்க தங்கி இருக்கிற அறையில போன் இருக்கும்போது... பப்ளிக் பூத்துக்கு வந்து பேசுவானேன்? அங்கே போன்ல ஏதாவது பிரச்சினையா?"

"இ... இல்லே...! இந்தப் பக்கமா வந்தேன். அப்படியே..."

"போன் பண்ணினீங்களாக்கும்... யாருக்கு போன் பண்ணுனீங்கன்னு தெரிஞ்சுக்கலாமா?"

"வ... வந்து என் தோழிக்கு."

"தோழிக்கு பேர்னு ஒண்ணு இருக்கணுமே...?"

வஹிதா பேசத் திணற– உடலில் தேவையில்லாத இடங்களில் வியர்த்தாள்.

"தோழியோட பேர் ஞாபகத்துக்கு வரலையா? சிரமப்படாதீங்க... அந்த தோழி பேரை நாங்களே சொல்றோம்."

ஆனந்த் 'லவுஞ்'சின் கோடியில் நின்றிருந்த ஒரு நபருக்கு கையைக் காட்ட, உயரமான அந்த ஆள் வேகமாய் வந்தார். முகத்தில் போலீஸ் களை.

"வாங்க... கிஷோர்! இந்த டெலிபோன் பூத் பேச்சை ஒட்டுக்கேட்ட எக்சேஞ்சில் நம்பரும், அட்ரசும் குடுத்தாங்களா?"

"குடுத்தாங்க சார்."

"பேர் என்ன?"

"ரெஜிதா..."

"போன் நம்பர்."

அதையும் சொன்னான்.

"அட்ரஸ்."

"நம்பர் 402, தீன்மூர்த்தி நகர்."

ஆனந்த், வஹிதாவிடம் திரும்பினார். 'லவுஞ்'சில் இவர்களைப் பொருட்படுத்தாமல் பிரயாணிகள் அலைந்து கொண்டிருக்க, பேசினார்...

"வஹிதா! இந்த ரெஜிதாகிட்டே போறதுக்கு முந்தி உங்ககிட்ட சில விஷயங்களைச் சொல்லணும். உஸ்மான், பாபுராவ்– இவர்களைப் பற்றி விசாரணை பண்ணினபோது, அவர்களோட அங்க அடையாளங்களை நீங்க சொன்னீங்க. குள்ளமா இருப்பாங்க. மாறுகண், விந்திய நடை.... இப்படி முக்கியமான தகவல்கள். நாங்களும் அதை நம்பினோம்... எது வரைக்கும் தெரியுமா? இன்னிக்கு காலையிலே... ஆறு மணிக்கு மிஸஸ் ஷாமினி தன் கணவர் துவாரகேஷோட டைரியைக் கொண்டு வந்து காட்டுற வரைக்கும்.

அந்த டைரியில் உஸ்மான், பாபுராவ் இவர்களைப் பற்றி ரெண்டு பக்கத்துக்கு எழுதி இருக்கிறார் துவாரகேஷ். விமானக் கடத்தல் நாடகம் ஒருவேளை தோல்வி அடைந்தால், டைரி போலீசுக்கு உபயோகப்படுற மாதிரி அவர் குறிப்புகளை எழுதி இருக்கிறார்..அவர் குறிப்பிட்டிருக்கிற உஸ்மான், பாபுராவ் அங்க அடையாளங்கள் நீங்க சொன்ன அடையாளங்களில் இருந்து மாறுபட்டிருந்தன.

ஏன் மாறுபடணும்...? யோசிச்சோம்...! விமானக் கடத்தல் நாடகத்துக்கு நீங்க மூணு பேர் மட்டும்தான் 'பார்ட்னர்ஸ்'. ஆனா, எதிரிகள் உங்களை விட்டுட்டு அவங்க ரெண்டு பேரை மட்டும் மடக்கிக் கொண்டு போயிருக்காங்க. உங்களை அவங்க தொடராதது முதல் நெருடல். ரெண்டாவது நெருடல்– உஸ்மான், பாபுராவ் அங்க அடையாளங்களை நீங்க மாத்திச் சொன்னது..."

ஆனந்த் பேச்சை நிறுத்த, ஜாதவ் தொடர்ந்தார்.



"தப்பு உங்கிட்டதான் இருக்குங்கிற முடிவுக்கு வந்தோம். நீங்க அமைச்சரோட ஆலோசனைக் கூட்டத்துக்குப் போயிருந்தபோது, ஒரு பெண் காவலரைவிட்டு ஷீலாராணிங்கிற பேர்ல ஏர்போர்ட் டெலிபோன் ஆபரேட்டருக்கு போன் பண்ணி உங்களைப் பேச வைக்க சொன்னோம்.

அதை நம்பி நீங்க கூட்டத்தில் இருந்து வந்ததும் ஷீலாராணிக்கு போன் செஞ்சீங்க... எங்க துறை பெண் ஷீலாராணி– நாங்க சொல்லிக் கொடுத்தபடி பேச, நீங்க கலவரப்பட்டீங்க. உங்க பேர்ல உண்மையிலேயே தப்பு இல்லேன்னா இந்த ஷீலாராணி விவகாரத்தைப் போலீசுக்குக் கொண்டு வருவீங்க. உங்க பேர்ல தப்பு இருந்தா... நீங்க இதை வேற பக்கம் கொண்டு போவீங்கன்னு நினைச்சோம். அது சரியா போச்சு. நீங்க போலீசுக்கு வரலை. ரெஜிதாகிட்டே போயிருக்கீங்க. இப்ப சொல்லுங்க... யார் அந்த ரெஜிதா?"

"ஸ... ஸார்."

"உண்மையை உள்ளபடி சொல்லிட்டா, போலீஸ் மாதிரி ஒரு நல்ல 'டிபார்ட்மெண்ட்' கிடையாது. பொய் சொன்னா இதுமாதிரி மோசமான 'டிபார்ட்மெண்டும்' கிடையாது."

"நா... நான் உண்மையைச் சொல்லிடறேன்...ஸார்..."

"குட்...! வாங்க... அறைக்குப் போயிடலாம்."

## 19

டெலிவிஷனில் பெண் செய்தி வாசிப்பாளர் சிரித்து வணக்கம் சொல்லிவிட்டு, "இன்றைய முக்கியச் செய்திகள்" என்று ஆரம்பித்தார்.

"முன்னாள் வெளியுறவு மந்திரி நூருல்லாகானின்

மனைவி ரெஜிதா இன்று கைது செய்யப்பட்டார். வெளிநாட்டு சக்திகளோடு இணைந்து உள்நாட்டு அமைதியைக் கெடுக்க முயன்றதாக இவர் மேல் ஏராளமான குற்றச்சாட்டுகள் உள்ளதைத் தொடர்ந்து கைதானார்.

இவர் கைதானபோது அருகில் இருந்த சூ ஸென் என்கிற சீன உளவாளியையும் போலீசார் கைது செய்தனர். சதித் திட்டங்கள் அடங்கிய காகிதங்கள் கைப்பற்றப்பட்டன. நேற்றிரவு முதல் காணாமல் போனதாகச் சொல்லப்பட்ட பைலட் சென்னும், உதவி பைலட் துவாரகேஷும் ரெஜிதாவின் பங்களாவில் இருந்த ஒரு 'லாக்கர்' அறையில் இருந்து மயக்கமடைந்த நிலையில் மீட்கப்பட்டு, ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டனர். இப்போது அவர்கள் உடல் நலம் தேறியுள்ளார்கள்.

ரெஜிதாவுக்கு உதவியாக இருந்து, சதித் திட்டங்களுக்கு உதவி செய்ததாக விமானப் பணிப்பெண் வஹிதாவும் கைது செய்யப்பட்டு, காவலில் வைக்கப்பட்டார். பன்னிரண்டு மணி நேரத்திற்குள் குற்றவாளிகளைக் கண்டுபிடித்த டெல்லி போலீஸ் துறைக்கு பிரதமர் பாராட்டு தெரிவித்தார். பைலட் சென், உதவி பைலட் துவாரகேஷ் இருவருக்கும் அரசின் உயரிய விருதுகள் வழங்கப்படும் என்றும் அவர் கூறினார்."

– செய்தியை வாசித்துக்கொண்டு இருக்கும்போதே, கேமிராவின் கோணம் மாற, டி.வி. திரையை அடைத்துக்கொண்டு பத்திரிகையாளர்கள் தெரிந்தார்கள்.

அவர்களுக்கு நடுவில்... நீட்டப்பட்ட மைக்குகளுக்கு முன்னால் சற்றே களைப்பான– ஆனால், களிப்பான முகங்களோடு பேசிக்கொண்டிருந்தார்கள் சென்னும், துவாரகேஷும்.

**(முற்றும்)**

---

ராணி சிண்டிகேட் சார்பில் வெளியிட்டவர், ஆசிரியர்: ர. பாஸ்கரன், 86, பெரியார் நெடுஞ்சாலை, சென்னை–600 007. அச்சிட்டவர்: சி. கல்யாண சுந்தரம், ராணி அச்சகம், 86, பெரியார் நெடுஞ்சாலை, சென்னை–600 007.